திசை
THISAI

## தெற்கில் கிளர்ச்சி

இந்திய அமைதிப்படையை நாட்டை விட்டு வெளியேறும் படி கோரி கடந்த புதன்கிழமை தென்னிலங்கை எங்கும் பரவலாகக் கிளர்ந்தெழுந்த மாணவர் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயம் அடைந்தனர்.

இதே நேரத்தில் இந்திய எதிர்க்கட்சிகளின் அமைப்பான இந்தியத் தேசிய முன்னணி இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்று இந்தியப் படை மதிப்புடனும் உண்மையுடனும் விலக வேண்டும் என அறிவித்துள்ளது.

ஆனல் இது சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த இந்திய அரசு, இலங்கை ஜனதிபதி கொடுத்த காலக்கெடுவுக்குள்

(12ஆம் பக்கம் பார்க்க)

திசை . 1 | 9-6-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 22

# ஜே.வி.பியின் நடவடிக்கையால் நாடு எரிமலையாகும்?

**ஜே. வி. பியின் இந்தியப் பகிஷ்கரிப்பிற்கான அழைப்பு, மீண்டும் தெற்கில் பெரிய இனக்கலவரம் ஒன்று உருவாக வழிவகுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தியுள்ளது. என, அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.**

ஜூன் 14 ஆம் திகதி தொடக்கம் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவதற்கோ விற்பதற்கோ ஜே.வி.பி. தடை விதித்துள்ளது.

அத்துடன் இத்திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப் படை இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும் எனவும் அது கோரியுள்ளது.

இக்கோரிக்கைக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து நகைப்பிற்குரிய எதிர்வினைகளும் கனதியான எதிர்வினைகளும் கிடைத்துள்ளன.

பம்பாய் வெங்காயம் இப்பொழுது இங்கு உற்பத்தி செய்யப்படுவதால், அதனை இப்பொழுது இலங்கைப் பெரிய வெங்காயம் என்றும், மைசூர் பருப்பு இப்பொழுது துருக்கியிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் செம் பருப்பு என்றும் 'மறு ஞானஸ்நானம்' செய்யப்போவதாக முதலியார் அறிவித்துள்ளார்!

மைசூர் பருப்பல்ல, அது மஷூர் (Mashoor) பருப்பு. அதற்கும் மைசூருக்கும் எதுவித தொடர்புமில்லை!

உணவு, விவசாய அமைச்சர் தனது தொழில் நுட்ப அறியாமையை மட்டும் வெளிப்படுத்தவில்லை, வெறும் பெயர்மாற்றங்களால் ஜே.வி.பி. யினரைத் திருப்திப்படுத்தலாம் என்ற தனது அரசியல் ஞானசூனியத்தினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜே.வி.பி. யினர் அரசுடன் பேச தூது அனுப்பியுள்ளதாக பிரகடனப்படுத்தி தான் தான் இலங்கையின் இரட்சகர் என்ற தோரணையில் கொழும்புச் சுவர்களில் சுவரொட்டிகளையும் ஒட்டச் செய்து, லலித் மூக்குடைந்தது தெரிந்ததே.

ஆனல் ஜனதிபதியோ ஜே.வி.பி. யினதும் — தமிழீழ விடுதலைப் புலிகளினதும் — கோரிக்கையைச் செவிமடுத்து, இந்திய அமைதிப்படை ஜூலை இறுதிக்குள் வெளியேற வேண்டும் எனப் பகிரங்கமாக இந்திய அரசைக் கேட்டுள்ளார்.

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின்படி, ஜனதிபதியே இப்படையை இங்கு அழைத்தார், அதனல் அவர் போகச் சொல்லும்போது அவர்கள் போகத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மொஸ்கோவின் 'ரெஸ்ரிங்'

இலங்கையில் இருந்து இந்திய அமைதிகாக்கும் படை இரண்டு மாதத்தில் வாபஸ் பெற வேண்டும் என்ற பிரேமதாஸாவின் அறிக்கையை மொஸ்கோ சார்பு இந்திய கொம்யூனிஸ்ற் கட்சி அங்கிகரித்தது. மொஸ்கோ பச்சை விளக்கு காட்டாமல் இப்படி ஒரு தீர்மானத்தை இக்கட்சி எடுத்திருக்க முடியாது என்பது திண்ணம். இக்கொம்யூனிஸ்ற் கட்சியின் அறிவிப்பானது பல்வேறு மட்டங்களிலும் கேள்விகளை எழுப்பியுள்ளதுடன் பலருக்கு ஆச்சரியத்தையும் ஊட்டியுள்ளது. இந் நிலையில் இவ்வாறன ஒரு தீர்மானத்தை எடுக்க மொஸ்கோ அரசு ஏன் அனுமதித்தது என்பது சரிவர விளங்கப்பட வேண்டியதாகும். ஒன்று பெரிதும் மாறிவரும் அரசியல் சூழலில் — எதிர்காலப் போக்குகளை அளவிடுசெய்வதற்குரிய ஒரு 'ரெஸ்ரிங்' ஆகவே மொஸ்கோ இதனைக் கையாண்டுள்ளது போலவே தெரிகிறது. இன்னெரு வகையில் பார்த்தால் உலக அரங்கிலும், தென்னசிய அரங்கிலும் பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறு சமிக்கைகளை கொடுக்கக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

## கொமெய்னியின் மறைவு

ஈரானின் ஆத்மீக, உலகியல் தலைவராகத் திகழ்ந்த ஆயத்துல்லா கொமெய்னி கடந்த சனிக்கிழமை காலமானர். இவர் 1979ஆம் ஆண்டு ஈரானிய ஷாவை பதவி கவிழ்க்க வைத்த இஸ்லாமியப் புரட்சியின் காரண கர்த்தாவாக விளங்கியதன் மூலம் உலகப் பிரசித்தமானர். அத்தோடு இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் தீவிர தலைவராகவும் விளங்கிய இவர் அண்மையில் ''சாத்தானின் செய்யுள்கள்'' என்ற நாவலை எழுதியமைக்காக சல்மான் ருஷ்திக்கு மரண தண்டனை அளிக்கும்படி ஆணையிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வேண்டுகோளும் பதிலும்

இந்திய அமைதிப்படை ஜூலை இறுதிக்குள் வெளியேற வேண்டும் என ஜனதிபதி பகிரங்கமாக விடுத்த வேண்டுகோளுக்கு, இந்திய அரசாங்க பேச்சாளர் ஒருவர் இந்திய அமைதிப்படை இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின்படி தமக்கு அளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றிய பின்னரே இலங்கையில் இருந்து வெளியேறும்; கலன்டரின்படி அல்ல என அறிவித்துள்ளார்.

## மலையக மக்களுக்கு ஆபத்து

மலையகத் தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளையும் தோட்டப்பகுதி எங்கும் ஊர்காவல் படைகள் அமைக்கப்படுவதையும் கண்டித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு.சந்திரசேகரம் கருத்து வெளியிட்டுள்ளார்.

## ஜனதிபதி ஏன் அறிவித்தார்?

இந்திய அமைதிப்படை இரண்டு மாதங்களுள் வாபஸாக வேண்டும் என ஜனதிபதி பிரேமதாஸ திடீரென ஒரு தலைப்பட்சமாக அறிவித்ததன் மர்மமென்ன?

பிரேமாவின் அரசு, ஒருபுறம் ஜே. வி. பி., எஸ். எல். எப். பி. எதிர்ப்புக்கிடையிலும் மறுபுறம் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கிடையிலும் சிக்கித் தவிக்கிறது. இதற்கிடையில் ஜூன் 5ஆம் திகதி வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கான இணைப்புப்பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்த வேண்டுமென ஜே. ஆரின் காலக் கெடுவும் உள்ளது. இவற்றைத் துரும்பாக எடுத்து எதிரணியினர் எதிர்ப்புக் குரல் எழுப்புவதை அடக்கி, திசைதிருப்பி தன்னை, ஒரு வீரபுருஷனுக கட்டியெழுப்பவே பிரேமா அமைதிப் படை வெளியேற்றத்தை அறிவித்துள்ளார் எனச் சொல்லப்படுகிறது.

ஆனல் இவ்வறிவிப்பு, இப்போது தர்க்க ரீதியாக தன்னை வளர்த்துக்கொண்டு, கட்டுப்படுத்த முடியாத விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.



திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/-
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40


ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# விஞ்ஞானபீட மாணவரின் முன்மாதிரி



13–05–1989 அன்று வெளிவந்த திசை இதழில் ''ஈழ பாரதியால்'' எழுதப்பட்ட 'ராக்கிங் எதிர்ப்பியக்கம் தேவை' என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தவறு செய்பவர்கள் தமது தவறை உணர்ந்து திருந்தினலொழிய தவறுகள் நிகழ்வதை முற்றுகத் தடுக்க இயலாது என்ற உண்மை ராக்கிங் விடயத்திலும் விதி விலக்கானதல்ல. 'ராக்கிங் ஆல்' ஏற்படும் பின் விளைவுகளை — நன்மை தீமைகளைப் பகுத்தாய்ந்து ராக்கிங் வரம்பு மீறுது பார்த்துக்கொள்ள அவ்வாறுன கட்டுரைகள் தூண்டு கோலாக அமையலாம்.

எனினும் இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்துவதாய் அமைந்துள்ளன. அதன் மூலம் குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிரேஷ்ட மாணவர்கள் அனைவரும் 'ராக்கிங்' என்ற போர்வையில் ஈனச் செயல்களில் ஈடுபடுகிறுர்கள் என்ற தவறுன கருத்து மக்கள் மத்தியில் பரவக்கூடும். யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் சுமார் நாலாயிரம் பட்டதாரி மாணவர்களில் சுமார் அறுபது சதவீதமான மாணவர் பெண்கள். இவர்கள் எவ்வித 'ராக்கிங்'கிலும் ஈடுபடுவதில்லை. ஆண்களிலும் சுமார் பத்து வீதத்திலும் குறைவான மாணவர்களே புதிய மாணவர்களின் அச்சத்தைப் போக்குவதற்கும், புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும், அவர்களுடன் வேடிக்கையாகப் பழகுவதுண்டு, பொதுவாக இவ்வித அணுகுமுறை பெரும்பாலான புதிய மாணவர்களிடையே எரிச்சலையோ மனக்கசப்பையோ உண்டுபண்ணுவதில்லை.

புதிய மாணவர்கள் தமது பல்கலைக்கழக வாழ்வில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ('ராக்கிங்' உட்பட) தொடர்பாக முறையிடவோ அல்லது ஆலோசனை பெறவோ தமது மாணவ ஆலோசகரை அணுகலாம். மேலும் இதுவிடயமாக மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரையோ அல்லது நிர்வாகத்தினரையோ அணுகலாம்.

புதிய மாணவர்களின் பீதியைப் போக்கவும், மாணவர் தமது ஆளுமை மற்றும் அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ள இப் பல்கலைக்கழகத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடனும், இம்முறை புதிதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட விஞ்ஞான பீட மாணவர்களுக்கு பல்வேறு அறிமுக நிகழ்ச்சிகள் (Introduction Programmes) விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தாலும் பல்கலைக்கழக நிர்வாகத்தினராலும் ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றின்போது பல்வேறு திணைக்களங்களையும் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் இவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர், ஒவ்வொரு திணைக்களத்தினது ஆய்வு கூடங்களுக்கும் இவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு ஆய்வுகூட வசதிகள் பற்றியும், அவற்றைப் பயன்படுத்துவது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழக நூல் நிலையத்தைப் பற்றியும் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதுதொடர்பான விதிமுறைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. மாணவர்கள் விளையாட்டுத் துறையில் தம்மை வளர்த்துக் கொள்ள பல்கலைக்கழகத்திலுள்ள விளையாட்டுத்துறை வசதிகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் தமது கொடுப்பனவுகளை எவ்வாறு பெறுவது என்பதுபற்றி விளக்கப்பட்டதுடன் இவற்றுடன் தொடர்புள்ள நிர்வாகத்துறை அலுவலர்களும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். இவ்வாறுன நடைமுறை சாத்தியமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் 'ராக்கிங்' எதிர்ப்பியக்கத்தை விட புதிய மாணவர்களுக்கு உதவக் கூடியன.

அடுத்து கடந்த பதினைந்து வருட கால யாழ். பல்கலைக் கழக வரலாற்றில் இராணுவத்தின் அழிப்பு நடவடிக்கைகளின் போதும் வேறு சக்திகளின் அரசியல் பழிவாங்கல்களின் போதும் மாணவர்கள் பலியானதுண்டு. எனது அறிவுக் கெட்டியவரை அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டது போல் 'ராக்கிங்' எந்த உயிரையும் பலிகொள்ளவில்லை.

— வளாகன்
பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

### அனந்துவின் கிண்டல்கள்

கடந்த 13-05-89.ஆம் திகதிய 'திசை'யில், 'அனந்து' என்பவர் எழுதிய 'மூன்று நிகழ்வுகள்-ஒரு பார்வை' என்ற கிண்டல் கலந்த 'விமர்சனம்', குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் (இவற்றில் குறைபாடுகள் இருந்தன என்பது மறுப்பதற்கில்லை) வெளிப்படுத்தமுனைந்த முக்கிய விடயங்களை (முக்கியமாக 'அடுப்படி அரட்டை' என்ற நாடகம் மூலம்) கொச்சைப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது.

முதலிரு நிகழ்வுகள் பற்றிய அனந்துவின் கிண்டல்கள் — மன்னிக்கவும் 'பார்வை' தொடர்பாகக்கூட சொல்லுவதற்கு இருந்தபோதும், மூன்றுவது நிகழ்ச்சி மீதான அவரது 'பார்வை' தொட்டு சில கருத்துக்கள் சொல்வது முக்கியமாகப்படுகின்றது. 'இது ஒரு நாடகமா? நிகழ்த்திக் காட்டப்படவில்லை' என்கின்றுர் அனந்து. நிகழ்த்திக் காட்டப்படுவது எல்லாமுமே நாடகமா? என்று முதலில் அனந்துவிடம் ஒரு கேள்வி. நிகழ்த்திக் காட்டப்படுதலில் ஒரு 'மாதிரி'யாக ஏன் இதைக் கொள்ள முடியாது? அடுத்து, இந்த நாடகத்தைப் பொறுத்தளவில் முக்கியமாகப்படுவது, யாருமே கையாளமுடியாத ஒரு விடயத்தை — ஒரு அவலத்தை, துணிந்து வெளிப்படுத்த முனைந்தமையே. இதனூடே, இச்சமூக அமைப்பில் பெண்களுக்கான இருப்பின் தன்மையையே இவர்கள் பரிசீலித்துள்ளார்கள். இவை பாராட்டப்படவேண்டிய அம்சங்களே — நமது ஆணாதிக்க மனோபாவத்தைக் கொஞ்சம் மறந்து.

ஆணாதிக்கம் எங்கெங்கு உள்ளதென்று பட்டியல் போட்டுக் காட்டுகின்றுர் அனந்து. இது மிகவும் அபத்தமானது. இச்சமூக அமைப்பில் ஆணாதிக்கம் எந்த மட்டங்களிலுமே உள்ளது. தன்மைகளில் மட்டுமே மாறுபாடு.

பிரபல்யமானவர்கள் அல்லது தெரிந்தவர்களது கலை இலக்கிய முயற்சிகள் பற்றிப் 'புழுகு'வதும், மற்றையவர்களது முயற்சிகளைக் கிண்டல் பண்ணி மட்டம் தட்டுவதும் (ஆக்கபூர்வமான விமர்சனத்துக்குட்படுத்தாது) பரம்பரையாக நமது இளந்தலைமுறையூடேயும் தொடர வேண்டுமா? ஆரோக்கியமான கலை இலக்கிய சூழல் உருவாகுவதற்கு இது உகந்ததல்ல.

— சசி. கிருஷ்ணமூர்த்தி
யாழ்ப்பாணம்.

### சிந்திக்க வைத்த விமர்சனம்

கடந்த 13.5.89 இல் வெளிவந்த திசை இதழில் 'கலைச்சாரல்' பகுதியில் 'மூன்று நிகழ்வுகள் ஒரு பார்வை' என்ற தலைப்பில் வெளிவந்த சி. சுமதி எழுதிய (தமிழாக்கம் வசந்தா) 'அடுப்படி அரட்டை' என்ற நாடகத்தின் விமர்சனம் என்னைப் பலவாறுகச் சிந்திக்க வைத்தது. விமர்சித்த 'அனந்து' அவர்கள் நிகழ்ச்சியைப் பார்க்காத எம்மைப்போன்றவர்களுக்கு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். இப்படியாக ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடுகிறோம் என்று கூறி சில வரட்டுக் கோட்பாடுகளைத் தமது வாதங்களின் தத்துவமாகப் போற்றுபவர்களுக்கு அவர்களின் தவறுகளை ஆழமாகச் சுட்டிக்காட்ட வைத்த திசை வார இதழுக்கு என் நன்றிகள்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஜூன் 14 — அரசாங்கத்துக்கு ஒரு சோதனைமிக்க காலம்

எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற காலக்கெடுவை ஜே.வி.பி யினர் அறிவித்துள்ளனர். அத்தோடு இக்காலக் கெடுவின் முடிவில் ஜே.வி.பி யினர் பலவிதமான அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதற்கான அறிகுறிகள் இப்போதிருந்தே தோற்றத் தொடங்கியுள்ளன. கொழும்பு நகரெங்கும் அவர்கள் ஒவ்செற்றில் அச்சிட்டு ஒட்டியுள்ள சுவரொட்டிகளிலிருந்து இவை தெரியவருகின்றன. அவற்றுள் முக்கியமானவையாக வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள், பாடசாலைகள் பகிஷ்காரம் ஆகியவை இடம் பெறலாம். ஆனுல் இவற்றுக்கெல்லாம் தலையானதாக இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரித்தல் இடம்பெறலாம். இதுவொரு முக்கியமான அம்சமாகும். காரணம், இதனுலேயே இலங்கைப் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து, தகுந்த பாதுகாப்பு தேவையென இந்தியர்கள் முறையிட்டுள்ளனர்.

இதன் பின்னணியிலேயே ஜனுதிபதி பிரேமதாச இந்திய அமைதிப்படை ஜூலை மாதம் முடிவில் இலங்கையை விட்டு வெளியேறுமென்று கொடுத்த அறிவித்தலையும் நாம் பார்க்க வேண்டும்.

இவரின் இந்த அறிவித்தல், ஜே வி.பி யினர் அரசுக்கெதிராக ஒன்றுகுவிக்க எண்ணியுள்ள தீவிரப்போக்கைத் தணிக்குமா என்பதே பிரச்சினை.

உண்மையில் ஜே.வி.பியினரின் சுவரொட்டிகள், அவர்களது அண்மைக்காலக் கொலைகள் (பொலிஸ் அதிகாரி பெனெற் பெரேரா, மாகாணசபை உறுப்பினர் லெஸ்லி றனகலை) எல்லாம் இந்திய அமைதிப்படை வெளியேறினுலும் ஜே.வி.பி யினர் தமது தீவிரவாதப் போக்கைக் கைவிடப்போவதில்லை என்பதையே தெரிவிக்கின்றன.

அத்தோடு இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேறினுல், வட — கிழக்குப் பகுதிக்கு இலங்கை இராணுவத்தின் அரைவாசிப் பகுதியினருக்கு மேல் அனுப்பப்பட வேண்டி ஏற்படும். இந்த நிலையால் தற்போது தென்பகுதியில் இடம்பெறும் அசம்பாவிதங்களை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் இலங்கை ராணுவம், அங்கிருந்து அகற்றப்படவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். இது ஜே வி.பி. யினருக்கு மிகுந்த வாய்ப்பை ஏற்படுத்துமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தட்டிக் கேட்க ஆளில்லாதபோது, ஜே.வி.பி. யினரின் 'அரசுக்கெதிரான அசம்பாவிதங்கள் உச்சநிலை அடையலாம்.

அடுத்து வடக்கு-கிழக்கிலும் இலங்கை ராணுவத்தின் வருகையை தற்போதைய நிலையில், இங்குள்ள மாகாண அரசை சார்ந்துள்ள விடுதலைக் குழுக்கள் விரும்பப் போவதில்லை என்பதை அவர்களின் அறிக்கையில் காட்டுகின்றன. இதுபற்றி சண்டே ரைம்ஸ்லில் எழுதும் சுரணிமாலா என்பவர் எழுதுகையில், இப்படி இலங்கை ராணுவம், ஒப்பந்தத்திற்கு எதிராக, வட—கிழக்குக்கு அனுப்பப்படுமாயின், ஒருதலைப்பட்சமான ஈழ விடுதலையை ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரகடனப்படுத்தலாம் எனக் கூறியுள்ளார்.

மொத்தத்தில் இவற்றையெல்லாம் கணக்கில் எடுக்கையில் இலங்கையரசுக்கு எதிர்வரும் ஜூன் 14 சோதனைமிக்க காலமாகும்.

— சிவா

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, லண்டன், போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புகின்றவர்கள்

பாஃரேன் (Bahrain)
உடனடி வேலைவாய்ப்பு

தொழிலாளர் (கூலியாட்கள்), மேசன், தச்சு வேலையாளர், டீசல் – பெற்ரோல் மெக்கானிக், ஓட்டோ எலக்ரிசன், எலக்ரிசன்ஸ் (வீட்டு வயரிங்) முதலியவற்றிற்கு உடனடியாக ஆட்கள் தேவை

சாப்பாடு, இருப்பிடவசதி இலவசம்

V. T. R. TRAVELS
41, 3rd Cross Street,
JAFFNA.
A–10

# மாசலின் சிந்தனை பற்றி நம்மவரின் புதிய நூல்

வண. பிதா பீற்றர்பிள்ளை, தனிநாயகம் போன்ற உயர் கல்விமான்களும், பல ஆயர்களும், குலசபாநாதன், சோ. சிவபாதசுந்தரம் போன்ற முதுபெரும் எழுத்தாளரும், பல பிரபல சிறுகதை எழுத்தாளரும் தோன்றிய கரம்பனில் பிறந்தவர் அருட்திரு. டொமினிக் A. ஜோஸப். பழைய உயர்கல்வி மரபு புதிதாக வெடித்த புரட்சிகளால் அழிந்துவிடவில்லை என்பதை அவர் நிரூபித்துள்ளார். சென்ற ஆண்டு ரோம் நகரில் வெளிவந்த கபிரியேல் மாசலின் சிந்தனை பற்றிய ஆய்வுநூல் அனைத்துலக அறிஞரின் பாராட்டுதலைப் பெறும் என்பதில் ஐயமில்லை. Self - Realization and Inter Subjectivity in Gabriel Marcel என்ற அந்நூலிலிருந்து சில பகுதிகளை வாசகர்களுக்குத் தருகிறோம்.

— ஆ-ர்.

## 1

இளைஞரான அருட் திரு டொமினிக் A. ஜோஸப் தமது கலாநிதிப்பட்ட ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டதன் மூலம் ஈழத்தின் உயர்கல்வி அறிவு ஊற்றுக்கள் காலத்தின் கொடுமைகளால் வற்றிவிடவில்லை என்பதை நிலைநாட்டியுள்ளார். ஊர்காவற்றுறையிலும், யாழ்ப்பாணத்திலும் இளமைக்கல்வி பயின்று, குருத்துவக் கல்விக்குப்பின் உரோம் நகரில் ஆய்வு நிகழ்த்தி உலக தத்துவ அறிஞர் மதிக்கத் தக்க இந்நூலை எழுதியமை எம்பாராட்டுக்குரியது. நம் இலக்கண மரபுப்படி தன் ஆசிரியன் வழங்கிய பாயிரத்துடன் நூல் வெளியிடப்பட்டுள்ளது. உரோம் பாப்பரசர் ஏர்பன் பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பற்றிஸ்ரா மொன்டின் தமது அணிந்துரையில் பின்வருமாறு கூறுகிறார்:

### பேராசிரியரின் அணிந்துரை :

மனிதனே மனித ஆய்வுப் பொருளில் தலையாயது; மண், விண், மதி, விண்மீன்கள், வாயு, நீர், அணு, கலங்கள், கடவுள், பற்றிய ஆய்வு கூட இறுதியில் மனிதனுக்கும் இவற்றுக்கும் இடையில் வந்த தொடர்பு என்ன என்ற வினாவுக்கே இட்டுச் செல்லும். மனிதன் தான் யார்; தனது மூல ஆரம்பம் என்ன; தான் இறுதியில் அடையும் நிலை என்ன; தனது வாழ்வும் அகபரிமாணங்களும் எவ்வகையான பொருத்தப்பாடு உடையன என்பன போன்ற வினாக்களுக்கு விடைதேடாமல் பாராமுகமாயிருக்க முடியாது. பிற உயிரினங்கள் பற்றி அக்கறையில்லாதிருக்கலாம். ஆனால் எம்மைப் பற்றி அப்படி இருக்கலாகாது. நம்வாழ்க்கைக்குப் பொருள் யாது; நமது இருப்பின் மதிப்பு என்ன என்ற பிரச்சினைகளில் முழுக்கவனம் செலுத்துவது நம் தலையாய கடன். இன்று மனிதனின் இயல்பு, உலகில் அவனுக்குரிய இடம், அவனது இருப்பின் அர்த்தம் ஆகிய வினாக்கள் குறித்து முன் எப்பொழுதும் இல்லாத அளவு 'ஸீரியசாக', அவசரமாக விடை காண வேண்டிய நிலைவந்துள்ளது. நவீன விஞ்ஞானம் இவற்றுக்கு விடைகாணத் தவறிவிட்டது. தத்துவஞானியே இச்சுமையை ஏற்கவேண்டும். சமகாலத் தத்துவஞானிகள் மனிதனை வரலாறு, பண்பாடு, சமூகவியல், உளப்பகுப்பாய்வு, சுய-அதீத நிலை, நம்பிக்கை, துயரம் முதலிய வெவ்வேறு கோணங்களில் நோக்குகின்றனர். உதாரணமாக பதட்டம் மிக்க மானிடன் (கீர்க்கெஹாட்), பொருளாதார மனிதன் (மார்க்ஸ்), காம மனிதன் (ஃப்ரூய்ட்), இருப்பு மனிதன்(ஹைடெக்கர்), குறியீட்டு மனிதன்(காஸிரெர்), கனவுலக மனிதன் (புளொக்), பண்பாட்டு மனிதன் (கெஹ்லென்), வீழ்ச்சியுறும் மனிதன் (றிக்கோயர்) என்ற நோக்குகள் அறிஞர்களின் கூடிய கவனத்தை ஈர்த்துள்ளன. நவீன தத்துவ ஓட்டங்களில் ஆளுமையியல் (Personalism) என்பது மனிதனைப் பற்றிய கூடிய விளக்கத்தை அளித்துள்ளது. இத்துறையில் அதிகம் சிந்தித்தவர்களுள் யூத அறிஞர் மாட்டின் பியூபரும், கத்தோலிக்கரான கபிரியேல் மாசலும் தலைசிறந்தவர்கள். டொமினிக் A. ஜோஸப் தமது கலாநிதிப்பட்ட ஆய்வுப் பொருளாக மாசலின் தத்துவத்தின் மையப் பகுதியை எடுத்துள்ளார். அச்சிந்தனையாளரது சிந்தனைகள் வரன்முறைப்படுத்துவதற்கு வாய்ப்பானவை அல்ல; ஆனால் இவர் அதனைப் புனரமைத்து அதி உன்னத ஆய்வு செய்ததுடன் தன் சொந்தப் பங்களிப்பையும் தந்துள்ளார்.

மனிதன் தன்னை முற்றாக உணர்வதற்குப் பிறரது உதவி வேண்டியிருக்கிறது. ஆகவே அவன் அனைவரது பங்களிப்பையும் எதிர்நோக்கி நிற்கிறான். 'நான்' என்பது 'நாங்கள்' என்பவைகளின் மகவு என்ற அழகிய சொற்றொடரில் மாசல் இதனை வெளியிடுகிறார். அகவாழ்வு மலர்ச்சி உறுவதற்கு அனைத்தையும் தழுவிய அன்பு உள்நின்று உந்தவேண்டும். எதிர்மறையாகக் கூறுமிடத்து மனிதன் தன்னைப் பிறரிடமிருந்து பிரித்துத் தடைச் சுவர்களை எழுப்புவதன் மூலம் தன் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது மட்டுமல்லாமல், தன்னை அழித்தும் விடுகிறான். துரதிர்ஷ்டவசமாக இப்படிப்பட்ட மனிதர்கள் உலகில் அதிகம்பேர் இருக்கிறார்கள்.

மாசலின் மற்றொரு முக்கிய பங்களிப்பு மனிதன் தன்னலத்தைக் கடந்து அதீத நிலை எய்தி மனித இனம் முழுவதையும் தன் அன்புக் கட்டுக்குள் இணைப்பதுடன் நின்றுவிடாது, இறைவனை நோக்கியும் விரிவடைய வேண்டும். 'நான் இறுதி நீ ஆவதற்கு வழிகாட்டுபவர் அவரே'. தன்னை அறியத் தலைவனை அறிய வேண்டும்.

உரோமன் கத்தோலிக்கக் குருவாயிருப்பதால் இந்நூலாசிரியர் தாம் நன்றாகவும் ஆழமாகவும் பகுப்பாய்வு செய்த இரு மனித இயல்புகளை செயல் முறைப்படுத்த நல்ல வாய்ப்பை உடையவராகத் திகழ்கிறார். அங்ஙனமே ஆகும்படி வாழ்த்தி ஆசானின் அணிந்துரை முடிவடைகிறது.



கபிரியேல் மாசல்

## 2

### நூலாசிரியரின் முகவுரை:

மெய்யியல் எனப்படும் தத்துவஞானம் வெறும் சிந்தனை உலகின் உயர்மட்டத்திற்குரியது என்ற பிழையான கருத்து பலரிடையே நிலவுகிறது. உண்மை அப்படியல்ல. அது சரியாக, தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றலை வளர்த்து, அன்றாட வாழ்வில் எழும் பிரச்சினைகளுக்குச் சரியான முடிவெடுக்கும் திறமையை அளிக்கிறது. ''ஆழமறியாமல் காலை விடாதே'' என்ற பழமொழி போல அது நாம் திடீர் முடிவுகள் எடுத்து, செயல்முறையில் பிழை விடாமல் தடுக்கிறது. அந்த வகையில் சிந்திக்கும் மனிதன் ஒவ்வொருவனும் ஒரு தத்துவஞானியே. ஆனால் அவன் அதை உணராது செயல்புரிகிறான்.

மொழிபெயர்ப்பும் குறிப்புகளும்:

**ஆ. சபாரத்தினம்**

தன்னை அறிதல் (Self—Realization) அனைத்து — அகவுணர்வு (Inter - subjectivity) என்ற துறை தத்துவஞானம். அன்றாடப் பிரச்சினைகளைக் கண்டு அங்கலாய்க்காது ஆர அமர இருந்து சிந்தித்துச் சரியான பாதையைப் பின்பற்ற வழிசெய்யும். மாசல் தினசரி வாழ்வில் தோன்றிய அனுபவங்களின் பிழிவை நாட்குறிப்புகளிலும் துண்டு ஆக்கங்களிலும் பதித்துச் சென்றார். வரன்முறைப்படுத்திய சித்தனைக் கட்டமைப்பாக அவர் தம் மெய்யியலை வகுத்து வைக்கவில்லை. ஆனால் அதுவே அவரது சிந்தனைக்கு வலு அளிப்பது. அவ்வாறு தொகுத்தும் வகுத்தும் கட்டப்பட்ட தத்துவஞானம் அனைத்து மனித நெஞ்சங்களின் சந்திப்புக்குத் தடையாகும் என்பது அவர் கருத்து. ஒரு நண்பர் அவரை அணுகித் தாம் வகுத்த ஒழுங்கு முறைக்குட்பட்டு அவரது சிந்தனைகளை வகுத்து எழுதும்படி கூறிய போது அவர் மறுத்து விட்டார். ''அறியாத பிரதேசத்தில் பிறர் நடமாடாத குறுக்கு வழிகளில் சென்று ஆராயும் என்னை நேரிய வீதி அமைக்கும்படி கேட்க வேண்டாம்'' என்பது அவர் கருத்து.

மனிதர்களிடையே எண்ணத் தொடர்பு ஏற்படும் போது அனைத்து ஆட்களையும் தழுவும் அகவுணர்வு விஞ்சி நிற்கிறது. இதனையே தம்சிந்தனைப் பொருளாக்கினார் மாசல். அதனால் அவர் ஒரு முக்கிய மனிதாயதவாதி, அண்டம் அனைத்திலும் அதிமுக்கிய படைப்பு மனிதன். அவனது இருப்புக்கு அர்த்தம் கொடுப்பது இந்த அனைத்து - அகவுணர்வும், தன்னையறிதலுமே. மனிதரை ஒருவரோடு ஒருவர் இணைப்பதும், தன்மைப் பொருளை பூரண முன்னிலைப் பொருளுடன் இணைப்பதும் இவையே,

மாசல் மனிதகுலத்திற்கு விட்டுச் சென்ற சிந்தனைச் செல்வத்தில் மூன்று உண்மைகள் துலங்குகின்றன: 1.) உலக சமூகம் பற்றிய ஆழ்ந்த உணர்வு. 2.) மரணம் பற்றிய சிந்தனை. 3.) நம்பிக்கை. (இவை தமது எண்ணக் கருவை வளர்த்தது எவ்வாறு என்பதை நூலாசிரியர் தமது 25 பக்க முகவுரையில் குறிப்பிடுகிறார்.)

மாசல் ஆய்வில் ஆழ்ந்திருந்த காலத்தில் உலகின் பல நாடுகளிலும், குறிப்பாக, லெபனான், தென் ஆபிரிக்கா, அங்கோலா, மொசாம்பிக், மத்திய அமெரிக்கா வடஅயர்லாந்து, என்றும் மறக்க முடியாத எனது தாய் நாடு ஆகியவற்றில் நிகழ்ந்த மிருகச் செயல்கள் என்னைப் பெரிதும் வருத்தின. ஒரு சிலரின் அராஜகச் செயல்களால் தினந்தோறும் குற்றமற்ற ஆயிரக் கணக்கானோர் அழிவதும், இலட்சக்கணக்கானோர் பட்டினி கிடப்பதும், உயிருடனிருப்போர் தம் இறந்த—மறைந்த உறவினர் குறித்து தொடர்ந்து மீளாத்துயருக்கு ஆளாவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டனவே என்று உள்ளம் நொந்தேன். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் நிகழ்பவை, இரத்தத் தொடர்போ, உறவு முறையோ, நட்போ இல்லாதவர்களுடைய அழிவுத் துயர் என்னை ஏன் வாட்டுகிறது எனச் சிந்தித்தேன், மாசல் விடையளித்தார் : மனிதர்களிடையே தொடர்பை ஏற்படுத்தும் அனைத்து—அகவுணர்வு என்ற அசைக்க முடியாத பாறையில் அமைந்த அத்திவாரமே அனைவரையும்ஒரே மனித குடும்பமாகஇணைக்கிறது. இந்த மாபெரும்குடும்பத்தில் நானும் ஒருவன்; எனவே என் சகோதர சகோதரிகளின் மீது ஆழ்ந்த அக்கறை என்றும் எழுவது இயற்கையே.

மரணம் அனைவரது வாழ்விலும் நிச்சயமாக ஒரு நாள் குறுக்கிடும். நாம் ஒவ்வொருவரும் அதனை ஒரு நாள் சந்திக்கப் போகிறோம் என்றாலும் எவரேனும் அதன் உள் இரகசியங்களில் கவனம் செலுத்துவதில்லை. இறந்தோர் மறுவாழ்வு பெறுவர் என்ற நம்பிக்கை கிறிஸ்தவனாகிய எனக்கு உண்டு. என் நெருங்கிய நண்பர் ஒருவர் கொடூரமான சூழ்நிலையில் அகால மரணமடைந்தார். அதிலிருந்து அவரது பழைய வாழ்வும் இளமையில் குறுக்கே தறித்து விட்ட அவரது மரணமும் என் மனக்கண்முன் ஓடிக் கொண்டே இருந்தன. அவரை இறுதித் தீர்ப்பு நாளில் சந்திப்பேன் என்ற துணிவு எனது கிறிஸ்தவ நம்பிக்கை காரணமாக அசைக்க முடியாது நெஞ்சில் நிலைபெற்றுள்ளது.

மாசல் நிச்சயமாக நம்புகிறார் : இறந்தோர் உயிருடன் இருக்கும் தம் நேயர்களுடன் அதீத ஆன்மீகத் தொடர்பு கொள்வர்; அழிக்க முடியாத பழைய நினைவில் நிற்கும் சம்பவங்கள் மூலம் இத்தொடர்பு வலுப்படும். மரணத்தின் மர்மத்தை மாசல் தொடர்புபடுத்துவதையும் உயிருடன் இருப்போர்க்கு அது பற்றி எழும் சிக்கல்களைப் போக்குவதையும் படிக்கப் படிக்க, நான் அவர்பால் முற்றாகக் கவரப் பட்டேன். (முக்கியமாக என் நண்பர் பற்றிய நினைவு இதனை இறுகச் செய்தது). இறந்தோர் பௌதிக உடல் கொண்டு எம்முன் உலாவாவிடினும், அவர்கள் ஆன்மீகமாக மகிழ்வுடன் திகழ்கிறார்கள் என்பது நிச்சயம். அவர்கள் உயிருடனிருப்போருடன் இடையறாது தொடர்பு கொள்கிறார்கள் என்ற ஆழ்ந்த சிந்தனை, எனக்குப் பெருவியப்பை அளித்தது. மாசல் ஆய்வில் பல்வேறு பரிமாணங்கள் என்னைக் கவர்ந்தன. இவற்றுள் மரணம் பற்றிய சிந்தனை முக்கியமானது. இதனைத் தனியே ஆய்ந்து எழுத என் இச்சிறு ஆய்வில் இடம் இல்லையே என வருந்துகிறேன்.

(தொடரும்)

# நம்மை நம்புவோம் நலம் பெறுவோம்

நம் மக்களின் வாழ்க்கையில் அவலங்களும் அதிர்ச்சி தரும் துயரங்களும் மலிந்து வருகின்றன. இவற்றைத் தடுக்க நம்மால் என்ன செய்ய முடியும் என்றோர் ஆற்றாமை. வெறுமனே தனி மனிதர்களால் இவற்றைத் தவிர்க்க முடியாதென்ற எண்ணம் நம்மிடையே நிலவுகிறது. இதனால் நமக்கோ நம்மவர்களுக்கோ துன்பம் வரும்போது அழுது புலம்புவது அல்லது திட்டித் தீர்ப்பதுதான் நம் வழிபோலிருக்கிறது. அல்லது கொஞ்சம் தூர இருந்து ஒரு குட்டி அரசியல் விமர்சன மகாநாடு நடத்தி நம் வாய்ச்

□ நீ ஒரு குகையில் வாழ்ந்தாலும் உன்னுடைய எண்ணங்கள் அதன் பாறைச்சுவர்களையும் கூட ஊடுருவி நூற்றாண்டுகள் பலவாக உலகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். யாரோ ஒருவரின் மூளையை இறுகப் பற்றி அவர் மூலம் செயலுருவம் பெறும் வரை அவை இங்ஙனம் தொடர்ந்திருக்கும். எண்ணங்கள், உண்மைத் தன்மை, தூய்மையான நோக்கம் என்பவற்றின் சக்தி அத்தகையது.

*—சுவாமி விவேகானந்தர்*

சொல் வீரத்தைக்காட்டிவிட்டு பின்பு பக்குவமாக நம் பழைய புளித்துப்போன வாழ்க்கை முறையைத் தொடர்வதும் நம்மில் பெரும்பாலோரின் வழக்கம். வேறு ஏதாவது ஆக்க பூர்வமான வழியில் பிரச்சினைகளை நோக்குவதாகவோ அல்லது அணுகிச் சிந்திப்பதாகவோ இல்லை. இந்நிலை மாற வேண்டும்.

மக்களை கூட்டமாக, குழுக்களாக கட்சிகளாக எண்ணிப் பழகிவிட்டோம். தற்காலநாகரிகத்தின் தவறுகளில் இதுவும் ஒன்று. ஏனெனில் மனிதர்கள் தனியாகத்தான் பிறக்கிறார்கள் தனியாகத்தான் இறக்கிறார்கள். மனிதர்களின் சிந்தனை வளர்ச்சி ஆன்மஈடேற்றம் எல்லாமே தனியாகத்தான் நடக்கின்றன. ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள் என்பனவும் அத்தகையவையே. எனவே நமது உன்னதமான உண்மைகள், உயர்வுகள் எல்லாம் தனியாக எட்டப்பட்டவையே. இதுவே மனிதர்களின் இயல்பான நிலை. ஆதலினால் அந்த இயல்பான நிலையில் நிலைத்திருப்பதின் மூலமே அவன் பலம் பெறமுடியும். எனவே தான் மக்கள் திரள் தான்பலம்கொண்டது. தனிமனிதர்கள் பலமற்றவர்கள் என்ற நம்பிக்கை தவறானது.

எனினும் நம்முடைய துன்பங்களிலிருந்து விடுபட அதற்

□ அறிமுறையளவில் இயலக்கூடியதான எதனையும் அதனை அடைவதிலுள்ள தொழில்நுட்ப இடர்ப்பாடுகள் என்னவாக இருப்பினும் அதற்கான ஆவல் போதியவளவு பெரிதாக இருப்பின் அதனைச் செயற்படுத்தி முடிக்கலாம். 'அக்கருத்து பித்துக்கொள்ளித்தனமானது' என எத்திட்டம் பற்றியும் கூறுவது சரியான எதிர்வாதமாகாது.

*— ஆர்தர் சி. கிளார்க்*

காகப் பாடுபடக்கூடிய அமைப்புகள், நிறுவனங்கள் வேண்டுமென்பதே நம்மிற் பெரும்பாலோரின் எண்ணம். இவர்களின் கருத்து என்னவெனில் தனிமனிதர்களால் ஒன்றும் செய்யமுடியாது. அமைப்புகளால்தான் ஆக்கபூர்வமாகச் செயற்படமுடியும் என்பதாகும், உண்மை அதுவல்ல. பல தனிமனிதர்கள் சேர்ந்துதான் அமைப்பை உருவாக்குகின்றனர். அந்தத் தனிமனிதர்களின் தீவிர விருப்பம், இலட்சியவேகம், நேர்மை, தூய்மை எல்லாவற்றிலும் மேலாக அவர்களின் உண்மைத்தன்மை என்பவற்றால்தான் அமைப்புகள் பலம் பெறுகின்றன. இந்தியாவில் மகாத்மா காந்தியின் காலத்தில் அகில இந்தியக் கொங்கிரஸ் உச்சமான புகழைப் பெற்றிருந்தது. அவருடைய மறைவிற்குப்பின் அது பலவீனப்பட்டு, பிளவுபட்டு தற்போது அதிருக்கும் நிலையும் நாமறிந்ததே. சோவியத் ரஷ்யாவில் லெனின் காலத்திலிருந்த கொம்யூனிஸ்ற் கட்சியின் சிறப்புநிலை ஸ்ராலினதும் அவர் பின்வந்தோர் காலத்திலும் மங்கியது. தற்போது கொர்பச்சேவ் காலத்தில் சில சீர்திருத்த முயற்சிகளை பரிசோதனை செய்துபார்க்கின்ற நிலையில் அக்கட்சி இருக்கிறது. அதற்கும் கொர்பச்சேவ் அவர்களின் ஆளுமையேகாரணமெனலாம். அருகிலுள்ள தமிழ்நாட்டில் அறிஞர் **அண்ணா** காலத்தில் மதிப்புடன் இருந்த தி. மு. க. இயக்கம் பின்பு பிளவுபட்டு தற்போது சட்டமன்றத்தையே சமர்க்களமாக மாற்றி தமிழருக்குத் தலைக்குனிவை ஏற்படுத்திவரும் நிலையையும் நாம் கவனிக்கலாம். அமைப்புகள் தான் பலம் தருபவையாயின் மேற்குறித்த பெரு மனிதர்களின் மறைவுக்குப்பின் அந்த அமைப்புகளில் சீரழிவுகள் ஏன் ஏற்பட்டன ? உண்மையில் விடயங்களை நிதானமாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து பார்ப்பின் இந்த அமைப்புகளின் சிறப்புக்கு உன்னத இலட்சியங்களும் அவற்றிற்காகத் தம்மை உண்மையாகவே அர்ப்பணித்த சில தனி மனிதர்களுமே மூல காரணமாக ஊற்றுக்களாக இருந்திருக்கிறார்களென்பது தெளிவாகும். எண்ணிக்கையின் அதிகரிப்புத்தான் பலம் தருவதல்ல. எண்ணங்களின் தீவிரம், உண்மையான அர்ப்பணம், நிலைத்திருப்பம், நேர்மை தூய்மை போன்ற உயர்ந்த தன்மைகளே பலம் தருபவை.

தங்களுடைய எண்ணங்களில் தீவிரவிருப்பத்தையும், உறுதிப்பாட்டையும் இணைத்துக்கொண்டதால்தான் பல தனிமனிதர்கள் வியத்தகு காரியங்களைச் சாதித்துள்ளார்கள். உயர்ந்த ஞானம் பெறவேண்டுமென விரும்பிய புத்தர் பிரான் அதனைத் தமது தீவிரதன்மையினால் பெற்றுக் கொண்டார்; கார்ல் மார்க்ஸ் தம்முடைய காலத்தில் பெரிதாகப் புரட்சிகள் எதுவும் செய்யவில்லை. ஆனால் அவரின் மறைவுக்குப் பின்னர் அவரின் நூல்கள்மூலம் விருப்பங்கள், எண்ணங்கள் லெனின் போன்றோரைப் பற்றிக் கொண்டமையினால்தான்

அனலையன்

பல புரட்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்டன. ஆழமான உண்மை உணர்வுடன் கூடிய விருப்பங்கள், நாட்டங்கள் உரிய விளைவை ஏற்படுத்தாமல் விடுவதில்லை. இன்றோ அல்லது நாளையோ அவை நின்று நிலவி உரிய விளைவை ஏற்படுத்துகின்றன. புத்தர், சங்கரர், யேசு, முகம்மதுநபி போன்ற ஆன்மீகத் தலைவர்களின் விருப்பங்கள் கருத்துக்கள் அவர்கள் தனித் தனியாகப் பெற்ற சத்திய தரிசனத்தின் மூலம்தான் பெறப்

□ எம் வாழ்வின் இரைச்சலில் உண்மையான பெறுமதியுடையது நாடு என்பதல்ல. மாறாகப் படைப்பாற்றலும் கவர்ச்சியும் கொண்ட தனி மனிதத் தன்மை, அதன் ஆளுமை என்றே கூறவேண்டியுள்ளது.

*— அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்*

பட்டன. அவற்ன்ற அந்த மா மனிதர்களின் — தனிமனிதர்களின் — எண்ணங்கள் என்றே கொள்ளலாம். அவை இன்றும் வலிமையுடன் வாழ்ந்து வருகின்றன. லூயிபாஸ்ரர், மேரிகியூரி அல்பேர்ட் ஐன்ஸ்ரைன், சேர் சி. வி. இராமன் போன்ற அறிவியல் அறிஞர்கள் தமது விருப்பங்களின் தீவிரத்தாலும் ஈடுபாட்டாலும் அமைப்புகள் எவற்றின் உதவியுமின்றி சாதனை புரிந்தவர்கள்.

மேற்குறித்தவற்றிற்கு அரண் செய்யும் வகையில் நமது மகாகவி பாரதியார் தம் சுயசரிதைப் பாடலில்:

○ *புலன்களோடு கரணமும் ஆவியும்*
*போந்து நின்ற விருப்புடன் மானிடன்*
*நலன்களேது விரும்புவன் அங்கவை*
*நண்ணுறப் பெறல் திண்ணமதாமென*
*இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்*
*யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்....*

○ *ஆழுநெஞ்சகத்தாசை இன்றுள்ளதேல்*
*அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்...*

○ *மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே*
*கதிகள் யாவும் தருமெனல் ஓர்ந்திடார்*
*கண்ணிலாதவர் போலத் திகைப்பர் காண்..*

என மூன்று இடங்களில் திரும்பத்திரும்ப நம் திருப்பங்கள், ஆழமான ஆசைகளின் வலிமையை வற்புறுத்தல் கவனிக்கத்தக்கது. எனவே நாம் தீவிரமாக விரும்புபவை நடந்தே தீரும். விடிவும் விமோசனமும் விரும்பிடின் பெறலாம். இன்றில்லாவிடின் நாளையாவது அவை நடக்கும்.

இது ஏதோ கவிஞரின் கற்பனை அனுபவம் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இலங்கையைத் தனது வசிப்பிடமாக வரித்துக் கொண்ட ஆர்தர் சி. கிளார்க் (Arthur C. clarke) என்பவர் உலகப்புகழ்பெற்ற விஞ்ஞான எழுத்தாளர். அவர் கூறுகிறார்:

"Anything that is theoretically possible, will be achieved in practice, no matter what the technical difficulties, if it is desired greatly enough. It is no argument against any project to say, 'the idea is fantastic'."

இவர் மட்டுமல்லாமல் பிறிதொரு அறிவியல் அறிஞரான பேராசிரியர் பீற்றர் மெடவார் (Prof. Peter Medawar) தமது, "Limits of Science" என்ற நூலில், "அறிவியல் உலகில் கொள்கையளவில் இயலக்கூடியதாகவுள்ள எதற்கான நாட்டமும் போதியவளவு உறுதியானதாகவும் நீண்டுநிலைத்திருப்பதாகவும் விளங்கின் அதனைச் செய்துமுடிப்பதும் இயலக்கூடியதே" எனக் கூறியுள்ளார். அறிவியல் உலகில் மட்டுமல்லாது ஏனைய துறைகளிலும் இது உண்மையானதே. திருவள்ளுவர் எண்ணியதை எண்ணியவாறு முடிப்பதற்கு உரிய மன உறுதிப்பாட்டையே வற்புறுத்துவது தெரிந்ததே.

மனிதன் எண்ணங்களின் மயமானவன். தனது உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்களை எண்ணுவதின் மூலம் தன்னை உயர்த்திக் கொள்பவன். இப்போது பல விஞ்ஞான ஆய்வுகள் கூட இதனை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக தற்கால ஆரவாரம் பகட்டு நிறைந்த தொழில் நுட்ப விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக அவன் கவனம் முழுவதும் அதிலேயே செலுத்தப்பட்டுள்ளது. ஆதலினால் நம் வாழ்வில் ஓர் ஆன்மீக வீழ்ச்சி அல்லது வரட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அவனிடம் தனது உள்ளார்ந்த பலத்தில் நம்பிக்கையின்மை பரவலாக எங்கும் ஏற்பட்டுள்ளது. கலாநிதி அல்பேர்ட் சுவெட்சர் (Dr. Albert Schweitzer) அவர்கள், "நம்பிக்கையின்மையின் விதை முளைவிடத்தொடங்கிவிட்டது.

□ கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் சென்றடைவீர்கள்.

*— பைபிள்*

உண்மையில் தற்கால மனிதனிடம் எவ்வித ஆன்மீகத் தன்னம்பிக்கையும் முற்றாக இல்லை. அவனின் வெளிப்பகட்டான தன்னம்பிக்கையின் பின்னால் பெரிய உள்ளார்ந்த நம்பிக்கையின்மையை அவன் மறைத்து வைத்திருக்கிறான்," என்று கூறியுள்ளது நோக்கத்தக்கது.

□ புதிய நிறுவனங்கள் எதன் மீதும் எனது நம்பிக்கையை நான் வைக்கவில்லை. அதற்கு மாறாக உலகெங்கிலும்—தெளிவாகச் சிந்தித்து, பெருந்தன்மையான உணர்வுடன், சரியாகச் செயல் புரிந்து அறமுறை உண்மைகளின் வாய்க்கால்களாக விளங்கும் தனிமனிதர்கள் மீதே நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

*— ரவீந்திரநாத தாகூர்*

ஆதனால் இப்போது நமக்கு அவசரமாகத் தேவைப்படுவது நம்மீது வைக்கும் நம்பிக்கையாகும். இறை நம்பிக்கையற்றவர்கள் இதனைத் தம் உள்ளார்ந்த பலத்தில் வைக்கும் தன்னம்பிக்கையாகவே கொள்ளலாம். ஒரு விதையின் மென்மையான முளை எப்படிக் கடுமையான நிலத்தைப் பிளந்து கொண்டு வருகிறதோ அல்லது இரும்புப்பாரையினால் பிளக்க முடியாத கற்பாறையை பசுமரத்தின் வேர் பிளந்து கொண்டு செல்கிறதோ அதே போன்று மனிதரின் எண்ணங்களும், விருப்பங்களும் அவற்றின் தீவிரத்தன்மை காரணமாக அற்புதமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே நம்பிக்கையோடு சுயநலமின்றி, சுகபோக நாட்டமின்றி உன்னதமானவற்றை விரும்புவோம். நம் துன்பங்கள், துயரங்கள் போய் உண்மையான உரிமை வாழ்வு கிடைக்கவேண்டுமென்று ஆழமாக ஆசைப்படுவோம். உண்மையான முழு விருப்பமாக அவை அமையின் நமக்கு விடிவு ஏற்படும். விமோசனம் கிட்டும். □

## பாலில் இருந்து...

பாலில் உள்ள புரதத்தில் இருந்து கசின் (Casscin) எனப்படும் இரசாயனப் பொருள் எடுக்கப்படுகின்றது. இதனை போமல்டிகைட் என்னும் இரசாயனப் பதார்த்தத்துடன் கலந்து இளகப் பண்ணி பொத்தான்கள், சீப்புகள் ஊற்றுப் பேனாக்கள் போன்ற பல்வகைப் பொருட்கள் செய்யப்படுகின்றன.

## பெரும் இலை

தென்னமெரிக்காவில் விக்ரோறியா இறெசினா (Victoria Regina) என்னும் தாமரை காணப்படுகின்றது. இதன் இலைகள் ஏறத்தாழ 5-6 அடி வரை விட்டம் கொண்டவை. இந்த இலை நீரில் மிதக்கும் போது ஒரு குழந்தையை வைத்தால் மிதந்து கொண்டிருக்குமாம்.

— பா. ரகுவரன்

## நாடகம் அல்ல

# தந்தையோடு வானுலகில்!

சாய்மனைக் கதிரையில் சாய்ந்தவாறு தந்தை செல்வா அமைதியாக இருக்கிறார். நான் அவரை அண்மிக்கிறேன். அவர் என்னை வடிவாக ஏற இறங்கப் பார்க்கிறார். திடீரென ஞாபகம் வந்தவராக என்னைப் பார்த்தவாறு,

"ஓ! 1961 ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தின் போது இராணுவ வாகனத்தின்முன் குறுக்கே தலைவைத் நுப்படுத்த அந்தப் புண்ணியமூர்த்தி தானே நீ"

"ஓம்" என்று சற்று வேதனை கலந்த புன்னகையுடன் கூறினேன்.

"அதுசரி, இப்போ ஏதாவது பாலங்கள், அல்லது சிறுதெருக்கள் ஏதாவது அமைப்பதற்கு எல்லிடம் உதவி கோரி வந்துள்ளாயா?" என்று தலையை நிமிர்த்திக் கேட்டார்.

எனக்குச் சிரிப்பு வந்தது. லேசாக, வெளிப்படையாகச் சிரித்துவிட்டேன்.

தந்தைக்கு எதுவுமே புரியாமல் என்னை ஆழமாக உற்றுப் பார்க்கிறார். மீண்டும் சிரிப்பு வந்தது. தந்தையின் முகத்தை அமைதியாகப் பார்த்தவண்ணம்,

"வேலைவங்கிப் படிவத்திற்கு வந்தியா என்று கேளாமல், குறைந்தபட்சம் ஒரு சிறு தெருவை அமைக்கும் அளவிற்காவது ஒரு பரந்த மனப்பான்மையுள்ள தமிழன் பூமியில் வாழ்கிறான் என்று நீங்கள் நம்புகிறதுமாதிரி உங்கள் கேள்வி இருக்கிறதே! அது எனக்குத் திகைப்பையும் சிரிப்பையும் ஏற்படுத்திவிட்டது."

தந்தையின் முகத்தில் திடீரென ஒரு மாற்றம்.

"ஏன்? எனது கட்சிப் பாசறையில் வளர்ந்த இலட்சிய புருஷர்கள் இப்போது நாட்டில் இல்லையா?"

"அதுபற்றிய விபரங்களை உங்களிடமிருந்துதான் அறிய விரும்புகிறேன்" என்று கூறினேன்.

தந்தை உடனடியாக எழுந்தார். ஓர் ஆவணக் கோவையை எடுத்துவந்தார். பூமியில் இருக்கும் சிலரது பெயர்களை வாசித்தார்.

தந்தை வாசித்த ஒவ்வொரு பெயருக்கும் எனது ஒவ்வொரு சிரிப்பு. தந்தையின் முகம் கோணிக் கோணிப் போனது. ஆத்திரத்துடன் அந்த ஆவணக் கோவையை அப்படியே வீசினார்.

"அது சரி, அப்படி வீசியது தான் சரி" என்று உணர்ச்சி மேலிடக் கூறிவிட்டேன்.

தந்தை அப்படியே சோர்ந்து கதிரையிற் சாய்ந்து விட்டார்.

சற்று நிதானமாக தந்தையின் முகத்தைப் பார்த்தேன். ஆர்வத்தோடு என் முகத்தை அவர் நோக்கினார். அப்போது நான் அவரைக் கேட்டேன். "தமிழரை இனிக் கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று கூறினீர்களே. அதன் அர்த்தமென்ன? பெருவெள்ளம், புயல், பூகம்பம் இவற்றிலிருந்து காப்பாற்றுமாறு?"

"இல்லை; அப்படியில்லை; பாம்பு, பூச்சி பல்லிகளிடமிருந்துமில்லை" என்றார்.

**மேகவன்**

"அப்படியென்றால்......" என்று சற்று இழுத்தவண்ணம் நான் கேட்டேன். "தந்தையே! பிரேஞ்சுப் பழமொழியொன்று எனக்கு ஞாபகத்தில் வருகிறது. அதாவது 'ஆண்டவரே! எதிரிகளிடமிருந்து நான் என்னைப் பாதுகாத்துக் கொள்வேன். ஆனால் நண்பர்கள் எனப்படுபவர்களிடமிருந்து என்னை நீ காப்பாற்றுவாயாக' என்பதே அது. இந்த அர்த்தத்திற்தானா நீங்களும் கூறியிருந்தீர்கள்?" என்று துடிப்புடன் கேட்டேன்.

தந்தையின் கண்கள் கலங்கத் தொடங்கின. பொலு பொலுவென கண்ணீர் உதிர்ந்தது. சற்று நேரத்தின் பின்பு கண்களை மெல்லத் துடைத்துக்கொண்டு,

"பொறு, சற்றுப் பொறு. எனக்கும் சிறுது விளக்கம் தேவை, புறாட்டஸ், மாக்அன்ரனி, மாக்கியவல்லி, முசோலினி ஆகியோர் இங்கிருக்கிறார்கள். அவர்களைச் சந்தித்து விளக்கம் கேட்டுக் கொண்டு வருகிறேன்" என்று எழுந்து சென்றார்.

சிறிது நேரத்தின் பின்பு திரும்பிவந்த தந்தை என்னைப் பார்த்து,

"மன்னிக்கவும், அவர்கள் அனைவரும் தற்போது பூமியில் பிறப்பெடுத்து விட்டார்களாம். ஆதலால்......

"ஆதலால்......"

"வா, பூமிக்குப் போய் அவர்களைக் கேட்டறிவோம்." என்றார்.

"பூமிக்குப் போவதில் பிரச்சினையில்லை. ஆனால் அங்குள்ள நிலைவரத்தை நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும்." என்றேன்.

"என்ன?"

"யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு ஒரு நினைவுஸ்தூபி கட்டி வைத்துள்ளார்கள். உங்களைக் கண்டதும் அந்த நினைவுஸ்தூபிக்கு உங்களை மரியாதையாக அழைத்துச் செல்வார்கள். பின்பு காசியப்பன் தனது தந்தைக்குச் செய்த செயல் உங்களுக்கும் நிகழும்." என்று கூறினேன்.

"என்ன?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் தந்தை கேட்டார்.

"இல்லை; அப்படி அச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. காசியப்பன் தனது தந்தையை உயிருடன் கட்டிடத்துள் வைத்துச் சமாதிகட்டிய மாதிரி, உங்களை உங்களது நினைவுஸ்தூபிக்குள் உயிருடன்வைத்து 'டம்பண்ணி' விடுவார்கள்.

"பிறகு!"

"டம், டம்மிங், உயிருடன் டம்மிங்......

தந்தை பூமியை மறந்தார், அவர் முகத்தில் ஒளி மங்கி 'டிம்'மானது. "பூமியில், குறிப்பாக தமிழீழத்தில் எல்லாம் டிம் டிம் டிம்" என்று அவர் வாய் முணுமுணுத்தது. □

# கடவுள் நம்பிக்கை, மார்க்ஸிஸம், நாஸிஸம்

**(உலகப் பிரசித்தி பெற்ற வரலாற்றறிஞர் ஆர்னல்ட் ரொயின்பி. இவர் வரலாற்றை தத்துவச்சார்போடு அணுகுபவர். இவரது மகன் பிலிப் ரொயின்பியும பிரபலமான புத்திஜீவியே. இவ்விருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடலில் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.)**

பிலிப் ரொயின்பி: ... முக்கியமான ஒரு அடிப்படைக் கேள்வி. "உங்களுக்கு கடவுளில் நம்பிக்கை இருக்கிறதா ?

ஆர்னல்ட் ரொயின்பி: உங்களது கேள்வியில் இந்தியர்களதும் சீனர்களதும் கடவுள் நம்பிக்கை உள்ளடக்கப்படுமாயின் நான் கடவுள் நம்பிக்கை உடையவன் என்பேன். ஆனல் இந்த நம்பிக்கையை கிறிஸ்தவர்களோ யூதர்களோ முஸ்லிம்களோ ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்தப் பிரபஞ்சத்தின் எஜமானர்கள் நாங்கள்தான் என்று நான் சொல்லமாட்டேன். இது ஒரு எதிர்மறையான பார்வையாக இருந்தாலும் இந்தப் பார்வையின்படி மனிதத் தன்மைக்கு மேலான ஆத்மீக இருப்பை நான் நம்புகிறேன். ஆனல் அதை நான் கிறிஸ்தவ, யூத, முஸ்லிம் பார்வைகளுள் அமையும் இஷ்ட தெய்வ வரையறைக்குள் நிணிக்கமாட்டேன்.

பிலிப் : எல்லா மதங்களும் இந்தப் பரந்த ஆத்மீக உண்மையின் சில தன்மைகளை கொண்டுள்ளன என்பதை நீங்கள் வலுவாக நம்புகிறீர்கள், அல்லவா ?

ஆர்னல்ட் : ஆம்

பிலிப : அப்படியானல் அவற்றில் ஏதாவது ஒன்றேடு நீங்கள் ஆகேயலாம் அல்லவா?

ஆர்னல்ட் : அப்படிச் செய்வது மற்றச் சமய உண்மைகளுக்கு விசுவாசமற்ற தன்மையைக் காட்டும் குற்றஉணர்வை ஏற்படுத்தும். ஆனல் ஒரு சிறந்த இந்துவாக இருக்கும்போது அப்படி ஏற்படாது. பிறசமயங்களின் முகத்தில் எச்சிலை உமிழாமலே ஒரு இந்துவாக இருக்கலாம். ஆனல் ஏனைய மூன்று சமயங்களைப் பொறுத்த வரை இது முடியாது. பின்னவற்றின் 'என்னுடைய சமயமே, என்னுடைய கடவுளே தனியானது' என்ற போக்கு யூதஇன உற்பத்தியாகும். அதே நேரத்தில் கிறிஸ்தவமும் சரி ஏனையவையும் சரி, அதைப் பின்

**வி. எம். பி.**

பற்றுவோருக்குத் தெரியாவிட்டாலும், அது இந்துசமயத்தின் சுவையான வேறு உருவங்களே என்று சொல்வான் இந்து தத்துவஞானி.

பிலிப் : உண்மையில் கார்ல் மார்க்ஸின் பிழையான கணிப்பீடு என்பது மனிதனது நம்பிக்கையின் பெரும் சக்திக்கும் அதையொத்த மனித நினைவுக்கப்பாற்பட்ட உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமையே ? அவர் உண்மையாகவே ஒரு முக்கியக் கண்டுபிடிப்பைச் செய்துள்ளார். ஆனல் ஏனையவற்றை கணக்கிலெடுக்காமல் செய்து விட்டது ?

ஆர்னல்ட் : இது முக்கியமாக புதியன கண்டுபிடிப்புச் செய்வோருக்கு ஏற்படுவது வழக்கம். அவர்களது புதிய கருத்து, முழு மனவெளியையும் ஆக்கிரமித்து ஏனையவற்றை வெளியே தள்ளிவிடுகின்றது. இது மனிதனுக்கு ஏற்படும் இயல்பான தவறுகும். புதிய கண்டுபிடிப்பு, எமது விளக்கத்துக்கு ஆழமான பார்வையைத் தந்தாலும் பலவற்றின் சமத்தன்மையையும் இழக்கச் செய்து விடுகின்றது. போரும் அரசியலுமாய் இருந்த பழைய உலகப் படத்தில் 'பொருளாதார நோக்கை' மார்க்ஸ் முன் வைக்கிறார், இது ஒரு முக்கியமான கண்டுபிடிப்பே. ஆயினும் பொருளியல் நோக்குக்கு கொடுத்த முக்கியத்துவத்தில் ஏனையவற்றைப் பார்க்க அவருக்கு 'கண்' இல்லாமல் போய் விட்டது.

பிலிப் : நான் நினைக்கிறேன் நாஸிஸம் (Nazism) என்பது கெட்டதாகவே ஆரம்பித்து சீரழிவாகவே போனது. கொம்யூனிஸம் என்பது நன்றாகத் தொடங்கி பிழையாகப் போனது என்று. அத்தோடு இவை இரண்டும் வெவ்வேறு மரபுவழி வருபவை எனவும் நான் நினைக்கிறேன். நாஸிஸம் என்பது மனேரதிய சகாப்தத்தின் (Romantic Movement) முடிவாகவும் கொமியூனிசம் என்பது அறிவு வாதத்தின் (Enlightment) முடிவாகவும் நான் கருதுகிறேன்.

ஆர்னல்ட் : உண்மை, உண்மை

## சருகான தேசம்

*விடிகாலைச் சந்தடிகள்*
*விரைந்தே நடக்கும்*
*பனிக்கால புலர்பொழுதுகள்*
*கண் மூடியே கழியும்.*
*அவர்களின் காத்திருப்புகள்*
*அதிகாலையில் படர்ந்து*
*அஸ்தமனத்திலும் தொடரும்*
*மீண்டும் மீண்டும்*
*மனதில் நெருடும்*
*நினைவுக் கீற்றுகள்.*
*அன்று இதுதான்*
*வளம் கொழித்தபூமி*
*இன்று இது*
*களம் கண்ட பூமி*
*அரும்புகள்*
*சருகுகளான தேசம்*
*மண்ணின் மகத்துவத்தை*
*மக்களுக்கு உணர்த்துகிறது.*

— கலை அரசன் □

## காளான் ஒரு உணவு

காளானில் புரதத்துடன், விற்றமின் A, B, C, Dயும் Ca, P, K, Fe, cu போன்ற பலவகை உணவு சத்துகளும் காணப்படுகின்றன.

காளான் ஒரு பூஞ்சணவகைத் தாவரம். இவ்வுணவில் கலோரி பெறுமானம குறைவு. இதய, நீரழிவு நோயாளர்களுக்குச் சிறந்த உணவு.

பெரிபெரி, ஸ்கேவி, இரத்தப் போக்கு போன்ற நோய்களுக்கு காளான் சிறந்த மருததாகும்,

காளானைத் தொடர்ந்து உண்டு வந்தால் கண்பார்வை சீராக இருக்கும். பற்கள் எலும்புகள் உறுதி அடையும்.

— ரகுவரன்

## கலைச்சாரல்

# அடுப்படி அரட்டை, கெட்ட சூனியக்காரி

## ஒரு விளக்கம்

13-05-1989 திசையின் 'கலைச்சாரல்' பகுதியில் வெளிவந்த ''மூன்று நிகழ்வுகள் ஒரு பார்வை'' என்ற விமர்சனக் கட்டுரைக்கு வெறுமனே ஒரு பதிலாக மட்டும் இது எழுதப்படவில்லை. எங்களது புத்திஜீவி வட்டங்களுள் மூழ்கியிருக்கும் தப்பான கருத்துக்கள் சரிசெய்யப்படவேண்டும். இந்த குழாமைச் சார்ந்த நாடகவிமர்சகர்களைப் பற்றித்தான் பேர்னாட் ஷா (Bernard Shaw) பின்வருமாறு கூறியிருக்கிறார். ''அவர்களுக்கு (விமர்சகர்) ஒன்றுந் தெரியாது. அல்லது தெரிந்ததையெல்லாம் பிழையாகத் தெரிந்திருக்கிறார்கள்.''

எந்தவொரு விஷயத்தையும் ஒரேயொரு வகையில்தான் கூற அல்லது வெளிக்கொணர முடியுமென்ற ''அடிப்படைவாதத்தி'' லிருந்து எழுந்ததே அந்த விமரிசனக் கட்டுரை. உதாரணமாக ஒருநாடகம் ஒரு வகையான மக்களைப் பற்றியும் ஒரு குறிப்பிட்ட வழியிலுந்தான் உண்டாக்கப்படலாமென்றதுமான கருத்து இது. இப்படிப்பட்ட அபாயகரமான குறுகிய இலட்சியவாதத்திற்கு முன்னோடிகள் இல்லாமலில்லை. முப்பதுகளில் சோவியத் யூனியனில் நிலவிய வரண்ட சோஷலிஸ யதார்த்தவாதம் (Socia-list Realism) இத்தகையதே. இச் சந்தர்ப்பத்தில் 'அனைந்து'வின் தரமற்ற விமர்சனம் இவ்வாறான ஒரு பார்வையின் தன்மையைக் கொண்டுள்ளது.

வடிவத்துக்கும் உள்ளடக்கத்துக்குமிடையிலான பிரிவுபற்றி நாம் எவ்வளவுதூரம் பேசினாலும் நடைமுறையில் இவை ஒன்றையொன்று பரஸ்பரம் வளர்க்கின்றவையாகவும் பாகுபடுத்த முடியாதவையாகவுமுள்ளன. வடிவத்தை அதன் உள்ளடக்கத்தினூடாகவே விளங்கிக் கொள்ளலாம். ஆகவே, இவ்விரண்டு அம்சங்களையும் நான் ஒன்றாகவே கையாளப் போகின்றேன்.

பாத்திரங்கள் வார்க்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆம், பாத்திரங்கள் இங்கு வார்க்கப்படவில்லைத்தான்! (Creation). இந் நாடகத்தாலுண்டாக்கப்பட்ட பாத்திரங்கள் உணர்வு நிலையுடைய சிந்திக்கும் மனிதர்களாக உள்ளார்கள். அவர்கள் தமக்குள்ளேயே உள்ளியக்கவாற்றலுடைய, நாடகத்தை உருவமைக்கும் சிந்தனை வளர்ச்சிப் போக்குகளின் பிரதிநிதித்துவமாகக் காணப்படுகின்றனர். எவ்வளவுக் கெவ்வளவு இந்தச் சிந்தனைப் போக்குகள் அனுபவ ரீதியான உண்மைகளினதும் உணர்ச்சிகளினதும் வெளிப்பாடாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு இப் பாத்திரங்கள் நாடகத்தின் உள்ளடக்கத்தாலும், வடிவத்தாலும் உருவமைக்கப்பட்டு வரையறுக்கப்படுகின்றன. நாடகத்தின் பொருள் (Content) அரசியலையும் வடிவம் (form) போதனை முறையையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

சாதாரணமாக பாத்திரங்களைப் பற்றிப் பேசும் போது எல்லா இடங்களிலும் தோல்ஸ்தோயினது அல்லது செக்கோவினது பாத்திரங்களையே தேடுகின்றோம். டிக்கன்ஸ், தோல்ஸ்தோய், செக்கோவ், பால்சாக் அவர்கள் பொருளாதார சமூக எழுச்சிக் காலத்தில் தோன்றினர். இவ்வெழுச்சிகள் ஒரு சக்திவாய்ந்த முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அணியின் உருவாக்கத்திற்கு இட்டுச் சென்றன.

இராசா, இராணிக் கதைகள் காலம் முடிந்து, ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு இயங்கியல் அடிப்படையில் வளர்ந்து வரும் சரித்திர நிகழ்வுப்போக்கில் சிக்கி, அதேவேளை அதைக் கையாள முனைந்து நடுவே தத்தளிக்கும் நடுத்தர வர்க்க மனிதர்களின் கதைகள்தோன்றின. குவித்தல் (Accumulation), கைத்தொழில் மயமாக்கல், முதலாளித்துவத்தின் எழுச்சி, வர்க்க நெகிழ்வுகள் (Social mobility) என்பன ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கத்திற்கெதிராகவும் ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கெதிராகவும் நிறுத்தின. புறநோக்கு யதார்த்தம் (Objective reality) நாடகப் பொருளுக்கு மூலமாகியது. இவ்வாறாக யதார்த்தவாத மரபில், வறுமையாக்கப்பட்ட பிரபுத்துவ மேற்குடியாளன், குலாக், கஞ்சத்தனமான முதலாளி, கேள்வியெழுப்பும் பெண் ஆகியோர் அதியுன்னத பிரதான பாத்திரங்களாக விளங்குகின்றனர்.

முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களோடு, ரஷ்யப் புரட்சியின் வெற்றி, காலனித்துவ எதிர்ப்பு, போராட்டங்களென்பன அதுவரை காலமும் வெறுமனே புறநிலையை அப்படியே படம் பிடித்துக்காட்டும் புறநோக்கு யதார்த்த நாடகங்களின் நடுநிலைமையை (neutra-lity) கேள்விக்குள்ளாக்கியது. அதிலிருந்து யதார்த்தப் பாரம்பரியம்(Realist tradition)தனது வலுவை இழக்கத்தொடங்கியது. இதனைத் தொடர்ந்த காலகட்டத்தில் குறிப்பான அம்சங்களை வளர்த்தெடுத்தல் (Specialization), அந்நியமாக்கம், வெளிப்படையான கருத்துக் கோட்பாடு, அரசியல் போதனாவாதம் ஆகியன நாடகங்களிற்கு உந்து சக்தியாயின. இச் சூழலில்தான் பிரெக்ட் (Brecht)உம் பெக்கற் (Beckett) உம் வெவ்வேறு துருவங்களில் பிரவேசிக்கின்றார்கள். அங்கு 'கருத்துக் கோட்பாடுடைய அரசியல்,' ('Ideological', political play) நாடகங்கள் தோன்றின.

'அடுப்படி அரட்டை' சந்தேகமற்ற முறையில் பிரெக்ட்டின் நடையிலேயே உள்ளது. குறிப்பான கருத்துக்களைச் சொல்ல முயற்சிக்கும் சுய உணர்வு நிலையும் (Self Consciousness) நாடகத்தில், அதனுடன் ஒன்றித்துப் போய் வெளிப்படும் அதேவேளை ஓர்வித விலகிய குறியீட்டுத்தன்மையின் தாக்கமும் Brechtian பாணியே. ஆனால் அதிலும் குறிப்பாக வடிவமைப்பின் துணிச்சலிலும் பொருளின் உறுதியிலுமே அது கூடுதலாக பிரெக்ட் இன் நாடகக் கோட்பாட்டைத் தழுவியுள்ளது.

... ''ஆயுதமேந்திபூட்ஸ் அணிந்த அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதம் இது; மெஸப்பத்தேமியாவில் இருந்து வந்த அலெக்ஸாண்டரின் சொத்து இது''......

...''அவர்கள் வெற்றிவீரர்கள்; தோல்வியணியின் மகளிரே எதிர்த்துரைக்க நீங்கள் யார்?......''

□□ சி. சுமதி □□

எனும் மேற்கூறிய வசனங்கள் போன்று பாத்திரங்கள் தம்மைவிட்டு விலகி பொதுமையாகக் கூறுதல், இயல்பாக இருத்தல் (சாதாரண நடைமுறையில்) எனும் கட்டுக்கோப்பிலில்லாத பாத்திரங்களின் நகர்வுகள் என்பவற்றை மேலே கூறியதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

அடுப்படி அரட்டை ஆரம்பத்தில் ஒரு தெருநாடக பாணியிலேயே உருவாக்கப்பட்டது. இது நடிகருக்கும் பார்வையாளருக்குமிடையே நெருக்கத்தையும் தொடர்பையும் வேண்டி நிற்கும் வடிவமாகும். ஆனால் இதனை வழமையான நாடகபாணியிலே நாற்சுவர் அரங்கில் மேடையேற்ற நாம் நிர்ப்பந்திக்கப்பட்ட போதிலும் நாடகத்தின் வளைந்து கொடுக்கும் தன்மையில் அதன் வலிமையையும் நெருக்கத்தையும் பரிமாறிக் கொள்ள ஏதுவாயிருந்தது.

அடுப்படி அரட்டை ஒரு நீண்ட கவித்துவமான வாசகம் ஆரம்பத்தில் நாடகம் பொருளால் (Theme) இணைக்கப்பட்ட கருத்துச் சிதறல்களுடன் தொடங்கி பலாத்காரத்துக்குட்பட்ட பெண்ணின் பிரமை நிலையில் (Hallucination) சங்கமித்து அதன் முன்னேற்றம் பார்வையாளர்களிடையேயிருந்து எழுந்த பெண்ணினால் தடுக்கப்பட்டு நாடகம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. இது ஆணாதிக்கத்தின் பல்வேறுபட்ட செயற்பாடுகளின் மீதான தீர்க்கமான வாக்கியமாகவுள்ளது. இச் செயற்பாடுகள் நமது சமுதாயத்தில் வன்முறையினால் அல்லது ஆதிக்க வர்க்கத்தின் கருத்தமைவின் (Ideology) மேலாதிக்கத்தால் அங்கீகரிப்பிற்கு உள்ளாகிறது. யாழ்ப்பாணத்தில் இவ்வதிகார வர்க்கம் குட்டி பூர்ஷுவா குணம்சத்தைக் கொண்டுள்ளது. இந்தக் குட்டிபூர்ஷுவா வர்க்க நலன்களின் சமூகக் கலாசார வடிவம் யாழ்ப்பாண சமுதாயத்தை ஊடுருவியுள்ளது. இதுவே நாடகத்தின் சமுதாயப் பின்னணியை உருவாக்குகிறது.

நான் இவ்வாறேதொடர்ந்து நாடகத்தின் உட்செயற்பாடு பற்றிப் பேசிக்கொண்டு போக முடியும் அவ்வாறு செய்யின் நாடகத்தின் யதார்த்தத்தால் ஈர்க்கப்பட்ட பெரும்பான்மையோருக்கு அதன் அர்த்தத்தை குழப்பும் வகையில் இக்கட்டுரை அமைந்துவிடும் ஆகையால் இன்னும் ஒரு சில விடயங்களைப் பற்றிக் கூறிவிட்டு இக்கட்டுரையை முடித்து விடுகிறேன்.

ஒரு கவலையீனமான விமர்சகர்தான் நாடகத்தை அதில் வரும் ஒரு தனிப்பாத்திரம் சொல்வதை வைத்துக்குழப்பிப்போகமுடியும் அதுவும் இன்றைய சூழ்நிலையில் இது எவ்வளவு அபாயகரமானதாயுள்ளது. அவர் ஒருவரியில் நாடகத்தில் வரும் இராணுவப் பலாத்காரம், தற்போதைய நிலையற்ற சூழ்நிலையின் வார்ப்பு என்பவற்றைப் புறக்கணித்து விடுகிறார். இதற்குப் பதிலாக ஒரு பாத்திரத்தின் உள்ளுணர்வு நிலையையே நாடகத்தின் எடுத்துக் காட்டாக ஆராய்கிறார். அதுவும் இப் பாத்திரமே எல்லாப் பாத்திரங்களிலும் கூடுதலாகத் தனித்துவப்படுத்தப்பட்டுள்ளது. பொருத்தமற்ற முறையிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக மேற்கோள் காட்டுவதும் பிழையாக மேற்கோள் காட்டுவதற்கு ஒப்பாகும். பிழையாக மேற்கோள் காட்டுவதும் (வசனப் பிழைகளோடு பிழையாக மேற்கோள் காட்டுவதும்) அத்துடன் பிழையாக மேற்கொள் காட்டுவதற்கு தங்களுக்கு உரிமையுண்டென்று விடாப்பிடியாக நிற்பதும் மோசமான வக்கிரிப்புச் செயற்பாடாகும்.

மேலும், இவர் தனது விமர்சனத்தின் பெரும்பகுதியில் ஆணாதிக்கம் என்னவென்று தனது கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். அதிலிருந்து இவர் கருத்தமைவு, அதற்கான அடிப்படை, அவற்றின் வெளிப்பாடுகள், இவற்றிற்கிடையேயான தொடர்பு, வித்தியாசம் என்பன பற்றி ஒருவித புரிந்துணர்வுமற்ற ஒருவர் என்பதை வெளிப்படுத்துகிறார். ஆக்கபூர்வமற்ற விமரிசனத்தை எழுதி நாடகத்தின் பெரும்பகுதியை இருட்டடிப்புச் செய்து எழுதியுள்ளார். இதன் மூலம் எவ்வளவுதான் தொழிலாள வர்க்கப் பெண்களைத் தனக்குத் துணைக்கு அழைத்தாலும் தனது வர்க்க சுபாவத்தை வெளிப்படையாகவே காட்டிவிடுகிறார். இதை இத்துடன் விடுவதே நல்லது.

கெட்டசூனியக்காரி காட்சி வடிவ அமைப்பாகவே முதன்மையாகக் கருதப்பட்டது. நாங்கள இதற்குக் கொடுக்க எத்தனித்த எந்த விளக்கமும் தோல்வியடைந்திருந்தாலும் லலிதா புறாடியின் எளிமையான துலக்கமான கவிதையும், சூனியக்காரியின் உலகம் எழுப்பிய இனிமையான உணர்வுகளும், வாளேந்திய அதிகாரத்தின் அநியாயமும் பார்வையாளர் மத்தியில் ஏதோ ஒரு சலனத்தை எழுப்பியிருக்குமென நான் நம்புகிறேன். கெட்ட சூனியக்காரியைப் பொறுத்த வரையில் இதுவே போதும்.

கவிதையரங்கைப் பொறுத்த வரையில் ஆக்ரோஷமான சத்தம் தொனிக்கவில்லை. புரட்சிகரமான செய்திகள் பிரகடனப்படுத்தப்படவில்லை. அது இயற்கையாக அமைந்திருந்தது. கவிதையரங்கு வெறும் எளிமையான கவிதை வாசிப்பாகவே இருக்கலாம். கவிதையின் உள்ளார்ந்த அம்சம் வாசித்தலும் கேட்டலுமே. அதனை நாம் ஏன் புறக்கணிக்க வேண்டும்? கவிதையரங்கு ஏன் கட்டாயம் நிகழ்த்திக் காட்டப்படவேண்டுமென்பது என்னுடைய விளக்கத்திற்கு அப்பாற்பட்டதாகவுள்ளது.

இம்மூன்று நிகழ்ச்சிகளிலும் முன்னொரு போதும் மேடையில் கோட்பாட்டு ரீதியிலும் அழகியல் ரீதியிலும் வடிவம் கொடுக்கப்படாத (யாழ்ப்பாணத்தில்), அதேவேளை பரவலான கிசுகிசுப்புகளுக்குள்ளான ஒரு விடயத்தை — அதாவது பலாத்காரம் (கற்பழிப்பு), வன்முறை, ஆணாதிக்கம் — நாம் அணுகியுள்ளோம். இந்நிகழ்வானது தனித்துவம் வாய்ந்த சாதனையாகும். அத்துடன் இச்சாதனையானது துணிச்சல் வாய்ந்த பெண்களினதும் ஆண்களினதும் ஒன்றிணைந்த பங்குபற்றுதலின் மூலமே சாத்தியமாகியது.

நான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மிகத்திறமையான மொழிபெயர்ப்புக்காக சுபோதினி, வசந்தா ஆகிய இருவருக்கும், கெட்டசூனியக்காரி கவிதைக்காக லலிதா புறாடிக்கும் துணிச்சலுடனும் கடமையுணர்வுடனும் செயற்பட்ட எல்லா நடிகர்களுக்கும் பாடுநர்களுக்கும் வாத்தியக் குழுவினருக்கும், மேடையிலும் வெளியிலும் உதவியவர்களுக்கும் என் தனிப்பட்ட நன்றியைக் கூறிக் கொள்கிறேன். கடைசியாக யாழ்ப்பாணத்தில் இன்று நிலவும் மட்டரகமான விமர்சனச் சூழ்நிலை வேதனைக் குரியதாகவுள்ளது. இந்நிலையில் நான் ஏனைய எழுத்தாளருக்கும் நாடகத்தயாரிப்பாளருக்கும் கூறக்கூடிய ஒரேயொரு விடயம் கலையாக்கம், அதன் உள்ளடக்கம் என்பனவற்றை உங்கள் சொந்தப் பகுத்தறிவில் மட்டும் நம்பிக்கை வைத்து உருவாக்குங்கள். காலம் அதனை அங்கீகரிக்கும். □

# 1988 இல் சிறந்த படம் 'பிறவி'

1988ஆம் ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மலையாளப் படத்திற்கு 4 தேசிய விருதுகள் கிடைத்திருக்கின்றன. அதுவே பிறவி என்னும் திரைப்படமாகும். சிறந்த படத்துக்கான விருது, சிறந்த நடிகருக்கான (பிறேம்ஜி) விருது, சிறந்த இயக்குநருக்கான (ஷாஜி) விருது, சிறந்த ஒலிப்பதிவாளருக்கான (கிருஷ்ணன் உன்னி) விருது ஆகிய 4 விருதுகளும் இப்படத்திற்குக் கிடைத்திருக்கின்றன.

ஜி அரவிந்தன் மலையாள திரையுலகில் சிறந்த இயக்குனர். இவரது படங்களுக்கு 'ஷாஜி கருண்' என்ற இளைஞர் ஒளிப்பதிவாளராக கடமை ஆற்றி வந்தார். அந்த ஷாஜி கருண் இயக்கிய முதலாவது படம்தான் 'பிறவி'.

□ த. தேவதாஸ் □

'நம் பிள்ளைகளை இப்படித்தான் வளர்க்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். அதற்குப் பொருத்தமான வாய்ப்புகள் இல்லை. எங்கு பார்த்தாலும் வன்முறை. அதிகாரவர்க்கத்தின் வன்முறைகள். இப்படியே எங்கு பார்த்தாலும் வன்முறைகள் தோன்றினல் நமது இளைஞர்கள் எப்படித் திருந்துவார்கள்? இந்த நிலைமையை பிரதிபலிப்பதற்காகவே ஓர் உண்மையான நிகழ்ச்சியை பின்னணியாக வைத்து இந்தப்படத்தை எடுத்தேன்' என்று கூறுகிறார் இந்த இயக்குநர் ஷாஜிகருண்.

இந்தப்படத்தின் 90 சதவிகிதம் மழையிலேயே எடுக்கப்பட்டதாம். வாழ்க்கையில் நாம் காணும் பயங்கர நிகழ்ச்சிகள் எப்படி எங்களுக்கு தெளிவாகத் தெரியாதோ அதைப் போலவே படத்தின் காட்சிகள் தெளிவாகத் தெரியக்கூடாது என்பதற்காகவே மழையிலே எடுக்கப்பட்டதுபோலும்!

இப்படத்திற்கு இன்னுமொரு விசேடமும் உண்டு. இப்படம் பலரின் பண உதவியுடன் கூட்டுறவு முறையில் தயாரிக்கப் பட்டிருப்பது தான் அது. எஸ். இராமச்சந்திர நாயர் என்ற பிரபல மலையாள எழுத்தாளர் கதையை எழுதியிருக்கிறார். இசையை ஜி. அரவிந்தன் புதிதாக செய்திருக்கிறார்.

பிறேமஜி என்ற 80 வயதுக் கிழவர் தான் கதாநாயகன். மற்றும் அர்ச்சனா (பாலு மகேந்திரா அறிமுகப்படுத்தியவர்) சி. வி. ராமன் போன்றோர் பிரதான பாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள்.

இத்திரைப்படம் வெனிஸ் திரைப்பட விழாவிலும் பங்கு கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

விமர்சகர்கள் மிக அதிகமாகவே இப்படத்தைப் பாராட்டியிருக்கிறார்கள்.

இத்திரைப்படத்தின் கதை எப்படிச் செல்கிறது பாருங்கள்:

இந்தியாவின் கேரள மாநிலத்தில் ஒரு அழகிய கிராமம். அங்கே 'சாக்கியர்' என்ற ஒரு வயோதிபர் வாழ்ந்து வந்தார். இவரது மனைவி ஒரு நோயாளி. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவள் மாலதி. அடுத்தவன் மகன். அவன் நகரத்தில் விடுதியில் தங்கி, படித்து வந்த கல்லூரி மாணவன்.

ஒவ்வொரு விடுமுறைக்கும் கிராமத்துக்கு வரும் பையன் இம்முறை வரவில்லை. பையனைத் தேடி வயோதிபத் தந்தை நகரத்துக்கு வருகிறார். மகனை விசாரிக்கிறார். எல்லோரும் பையன் எங்கோ போய்விட்டான் என்கிறார்களே தவிர எங்கு போனான் என்று சொல்கிறார்களில்லை. தமக்கை மாலதியும் தம்பியைத் தேடிப்புறப்படுகிறாள். தம்பி ஒரு கொலை வழக்கில் மாட்டிக் கொண்டிருக்கிறான் என்றும் பொலிஸ் அவனைப் பிடித்துச் சென்றார்கள் அதன் பின் அவனைக் காணவில்லை என்றும் எல்லோரும் சொல்லுகிறார்கள். இந்தச் செய்தியை தன் தந்தைக்கு எப்படிக் கூறுவது என்று தெரியாமல் மாலதி திண்டாடுகிறாள்.



'பிறவி' யில் ஒரு காட்சி.
வ – இ: சாக்கியராக வரும் பிறேம்ஜி.

சாக்கியர் பைத்தியக்காரனைப் போல் வெயிலிலும் மழையிலும் மகனைத் தேடி அலைகிறார்.

ஒரு நாள் சாக்கியர் படகில் ஏறி மகனை தேடிச் சென்றார். எங்குமே அவனைக் கண்டுபிடிக்காமலே கரைக்கு வந்தார். படகுக்காரன் இவரது கையைப்பிடித்து இறக்கி கரைக்கு கொண்டு வந்து விட்டான். பின்பு அவன் படகுடன் திரும்பிச் சென்றான்.

சாக்கியர் மனோநிலை சரியின்றி குழம்பிப் போனார். படகுக்காரனைப் பார்த்துக்கொண்டே தனது பையனின் பெயரைச் சொல்லி கூப்பிட்டார். படகுக்காரனுக்கு இது கேட்கவில்லை; அவன் தன் பாட்டில் போய்க்கொண்டே இருந்தான். ஒன்றுமே புரியாமல், உதவுவதற்குக்கூடத் துணை எதுவும் இல்லாமல் சாக்கியர் கரையில் பைத்தியக்காரன் போல் நின்று கொண்டிருந்தார்.

இப்படித்தான் திரைப்படம் முடிகிறது. எதிர் காலத்தில் பல்வேறு உலக அரங்குகளிலும் கலந்துகொண்டு விருதுகளைப் பெறும் வாய்ப்பு இப்படத்திற்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. □

# 'பிறவி மிகவும் யதார்த்தமானது'

**பிறவி படத்திற்காக சிறந்த இயக்குநருக்குரிய (1988) இந்திய தேசிய விருதினைப் பெற்றவர் சாஜி M. கருண்.**

**தற்போது 36 வயதுடைய இவர், கடந்த 12 ஆண்டுகளாக ஒளிப்பதிவாளராகக் கடமையாற்றினர். ஜி. அரவிந்தனின் படங்கள் பலவற்றிற்கு இவர் ஒளிப்பதிவு செய்திருப்பது, குறிப்பிடத்தக்கது.**

**'பிறவி' இவர் இயக்கிய முதற் படம்.**

**இந்தியா ருடே சஞ்சிகையின் மூத்த நிருபர் ரமேஷ் மேனன் அவருடன் நடத்திய செவ்வி, இங்கு தரப்படுகிறது.**

**O எளிமையான கதையான பிறவியைத் திரைப்படமாக்க, உங்களைத் தூண்டியது எது?**

□ முற்றிலும் நேர்மையான வாழ்க்கையை எம்மால் வாழ முடியாதிருப்பது ஏன் என, எம்மை நாம் அடிக்கடி கேட்டுக்கொள்கிறோம். சீர்கேடானதும் உணர்ச்சியற்றதுமான அரசாங்கத்தினுல் ஆதரவளிக்கப்படும் சீர்கேடான சமூகத்தில் வாழவேண்டியிருப்பதால், அவ்வாறிருக்க எம்மால் முடியவில்லை. ஓர் அப்பாவியின் ஸ்தாபனரீதியான படுகொலையை அரசாங்கம் எப்படி அலட்சியப்படுத்துகிறது என்பது, 'பிறவி' கதையில் இருக்கிறது. 'பிறவி' மிகவும் யதார்த்தமானது.

**O கலைப்படங்கள் வழமையாக, சிக்கலான நிலைமைகளுடனும் உருவகங்களுடனும் இணைந்திருக்கும். நீங்கள் வேண்டுமென்றுதான் பிறவியை எளிமையாக உருவாக்கினீர்களா?**

□ பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு தொடர்பு முறையாக திரைப்படம் இருக்க வேண்டுமென்றால், அது எளிமையாக இருக்கவேண்டுமென்பதை, நான் உறுதியாக நம்புகிறேன். இதைத்தான், இந்தியப் படங்களில் 'மூன்றாவது அலை'யென நான் அழைக்கிறேன்; ஏராளமான இளம் இயக்குநர்கள் இதைச் செய்கிறார்கள்.

**O இந்தியப் படங்களின் எதிர்காலம்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

□ சமூகப் பொருத்தப்பாடு கொண்ட படங்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் உண்டு. காத்திரமான—மாறுதலான கதையமைப்பைக் கொண்ட படங்களை ஒளிபரப்ப தொலைக்காட்சித்துறை தயாராயிருப்பதால், குறைந்த செலவிலான படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**O தென்னிந்தியப்படங்கள் இவ்வருடம் அநேக விருதுகளைப் பெற்றன. இது எதையாவது குறித்துக் காட்டுகிறதா?**

□ இத்திரைப்படங்கள் குறித்த நோக்கங் கொண்டவை. வெகுஜனப் பொழுதுபோக்குக்காக அவை உருவாக்கப்படவில்லை. காத்திரமான நல்ல படங்களை அது ஊக்குவிக்கும்.

அ. யேசுராசா

**O மலையாளத் திரைப்படத்துறை மிக மோசமானதும் சர்வதேச ரீதியில் சிறப்பானதுமான படங்களை உருவாக்குகிறது. இதனை எவ்வாறு விளக்குவீர்கள்?**

□ எல்லா இடங்களிலும் இவ்வாறு நிகழ்கிறது. நல்ல படங்களை உருவாக்கும் எல்லாநாடுகளும், மோசமான படங்களையுங் கொண்டுள்ளன.

**O இப்போது எதை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளீர்கள்?**

□ உழைக்கும் சிறுவர்களைப் பற்றி ஒரு படம். எமது நாட்டிலுள்ள சிறுவர்கள்—10வயது கூட நிரம்பாத நிலையிலும்—உயிர்வாழ்வதற்காக, தாங்களாகவே முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையிலிருப்பதை அது சித்திரிக்கிறது. வட இந்திய முஸ்லிமும் தென்னிந்திய இந்துவும் கலப்புத் திருமணம் புரிகையில் சமூகத்தால் தோற்றுவிக்கப்படும் பிரச்சினைகள் பற்றிய, இன்னொரு படத்திலும் ஈடுபட்டுள்ளேன்.

**O பிறவி இத்தகைய உயர்வான இடத்தினை ஏன் பெற்றதென்று நினைக்கிறீர்கள்?**

□ மனித அவலத்தினை ஆக்கத்திறனுடன் அது சித்திரிப்பதாகவும், திரைப்பட உணர்திறனைப் பிரதிபலிப்பதாகவும், திரைப்பட அழகியலில் புதிய சிகரங்களை உருவாக்குவதாகவும் நடுவர் கூறியுள்ளனர் □

## இரு கோடுகள்

*வீதிகள் தோறும் அலைந்தலைந் தேயுடல்*
*விற்றிடும் மாதரைப் பார் — தினம்*
*ஜாதிகள் கூறியே தாம்பெரி யோரெனச்*
*சாற்றிடும் நீசரைப் பார்!*

*காசைவிட நேர்மை கண்ணியம் எதுக்கெனும்*
*கயமை மனங்களைப் பார்—பெரும்*
*ஆசையினுல் பிறர் சொத்து சுகங்களை*
*அடைந்திடத் துடிப்பவர் பார்!*

*கல்வி இருந்தும் தகுதியைப் போற்றிடாக்*
*கட்சி அரசியல் பார்–இங்கே*
*செல்வம் வறுமை எனுமிரு கோடுகள்*
*செல்கின்ற பாதையைப் பார்!*

*யேசுவும் புத்தனும் காந்தியும் தானெமக்கு*
*எத்தனை நீதி சொன்னார்—அதைப்*
*பேசும் மனிதனே பேயாய் அலைந்திந்தப்*
*பாரைக் கெடுத்து நின்றார்.*

— நெடுந்தீவு லக்ஷ்மன்

## விநயமாக ஒரு வேண்டுகோள்

சொல் –
புதிதாய் ஏதாகிலும்
சொல் –;
பொய் சொல்லாதே !
களவு எடுக்காதே !
பிறர்மனை நயக்காதே !
என்றெல்லாம் பேசாது
சொல் –;
புதிதாய் ஏதாகிலும்
சொல்.

## கையறு நிலை

அந்தக்
கவிதைகள்
அழிந்தே போயின;
என்ன செய்யலாம்;
எவரை நோகலாம்;
யார்க்கெடுத் துரைக்கலாம் ?
அந்தக்
கவிதைகள்
அழிந்தே போயின.

— க. சண்முகன் (1983)

## திசையின் குறுநாவல்

# சொர்க்கம்

மதிஆரனி

## 2

இந்த வாழ்க்கை ஓட்டம் ஓடி முடிந்திருக்காத ஒரு நாளில் ...... ...

சொர்க்கத்தில் இருந்து மூன்று பேரும் அமுதஞ் சுவைத்துக் கொண்டிருக்கிற உற்சாகப் பொழுதில்.........

அலிஸ் நோனா !

அலிஸ் நோனா வருவதைக் காணுமளவு நிதானம் செவுத்திக்கே இருந்தது. அமுதம் திடீரென்று கசந்தது.

எசக்கி, செவுத்தியின் சிநேகிதத்தை முடித்துக் கொள்வது பற்றியும் திடீரென்று மாயமாக மறைந்து போவதைப் பற்றி யோசித்தாலும் கரீம் அருகில் இருந்ததில் துணிவு கொண்டான்.

கரீம் மலையைப்போல இருந்தான்.

அலிஸ்நோனா தான் விற்கிற கலப்படக் கையிருப்பு முடிந்து போகிறபோதெல்லாம் அதைப் புதுப்பித்துக் கொள்வதற்காக இங்கு சிலவேளைகளில் வருவதுண்டு. ஆனால் அவள் கையில் பையில்லை. அத்துடன் வெகு வேகமாக இரைந்தபடி வந்து கொண்டிருந்தாள்.

தேவர்கள் மூவருக்கும் இது ஏதோகஷ்டம் என்பது வெளிப்படையாகத்தெரிந்தது. அலிஸ் நோனா முதலில் கரீமிடந்தான் போனாள், எசக்கி இருக்கிற இடத்தில் வெளிப்படையாக ஏதேனும் சொல்ல முடியுமா? செவுத்தியிடம் சொல்லி என்ன பிரயோசனம்?

செவுத்திக்கு உண்மையில் அவள் தன்னிடம் வராதது சந்தோஷமாகவே இருந்தது. நீடிக்கவில்லை. கரீமைத் தனியே கூட்டிக் கொண்டு போய் விஷயத்தைச் சொல்லிவிட்டு திரும்பி நேரே செவுத்தியிடம் தான் வந்தாள்.

'உடனே வீட்டுக்குத் திரும்பு' மிரட்டலும். கட்டளையும்.

செவுத்திக்குத் தான் போராடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க நேரமெடுத்தது. இன்னுங் கொஞ்சம் உள்ளே இறங்கினால்தான் பேசமுடியும். இப்போது சண்டை போடுவதானால் ஏற்கனவே இறங்கியிருக்கவேண்டும். ஆகவே கரீமுக்கும் இசக்கிக்கும் கையைக் காட்டிவிட்டு அவள் பின்னால் நடக்க ஆரம்பித்தான்.

கரீம் வேலையிருக்கிறதாக எசக்கியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான். அலிஸ்நோனா கஷ்டத்தில் இருக்கிறாள்.

எசக்கி தனித்துப் போனான். அலிஸ்நோனா என்ன சொல்லியிருக்கக்கூடுமென்பதான விசாரணை எசக்கிக்குக் கிடையாது. வரவும் வராது. தனிமையே தங்கி நின்றது. இந்தத் தனிமையை வெல்வதற்கு வழக்கமாக எசக்கிக்கு அமுதம் நிறையத் தேவை.

இந்தத்திடீர்ச்சூழலின் கனத்தில், 'பாதரிடம் போவோம்' என்று ஒரு தரம் யோசித்தாலும் வீடு போய்ச் சேருவோம் என்கிறநோக்கத்துடன்எழுந்து போனான், அமுதம் பற்றிய யோசனையின் ஆதிக்கத்தில், விடாயில், எங்காயினும் இரண்டு ரூபாய் தெண்டுவதற்கான வழிவகைகளை யோசித்ததில், கால்கள் தம்பாட்டில் எங்கெல்லாமோ இழுத்து......... ஒரு வகையாய் வீடுபோய்ச் சேர்ந்தான். முன்னர் ஒரு காலத்தில் இம்மாதிரியான இக்கட்டுகளில் பாதரிடம் தன் சாதுரியங்களைக்காட்டி, ஒன்றோ, இரண்டோ கறந்து விடுவதுண்டு. பிறகு பாதருக்கு சந்தேகம் வரத்தொடங்கியதில் இந்த வருவாய்கள் குறைந்து போயின.

அடுத்த நாள்தான் அவனுக்கு விபரம் தெரிந்தது.

சொர்க்கத்தில் 'கோரம்' இல்லாமம் சபை கூடியபோது.

கரீம் வரவில்லை.

செவுத்தி வந்து சொன்னான். அவன் இரண்டாவது மகன் விஜிதவைக் காணவில்லை. பொலிஸ் வந்துவிசாரித்துக் கொண்டு போயிருந்திருக்கிறது. அலிஸ் நோனாவே கவலைப்படுகிறாள்.

என்றால், இது மிகப் பாரதூரமான விஷயம்.

அமுதத்திற்கு வழியில்லாது கையில் ஒவ்வொரு ரூபாயுடன் ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தபோது ......

எசக்கிக்கு நன்றாகத் தெரிந்தது.

ஒரு ரூபாயுடன் நாக்கை நனைத்துக் கொண்டால் எப்போதும் மகன் பீட்டருடன் - ஏன்? வீட்டில் எல்லாருடனும் சண்டையில்தான் முடியும்.

'நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்பதை செவுத்தியானுக்குள் செலுத்திவிட முயன்றான். செவுத்தியானுக்கோ இந்த மாதிரி யோசனைகள் எப்போதும் சிடையாது கையில் கிடைக்கிற காசிற்கு உள்ளே போய்விட வேண்டும். எசக்கியின் 'நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்கிற விஞ்ஞாபனம் அவன் காதில் ஏறாது போயிற்று.

எசக்கி குடிப்பது கூடாது என்று வேறு சொல்ல முயற்சித்தான்.

செவுத்தியான், எசக்கி வைத்திருந்த ஒரு ரூபாயிலும் தன் நம்பிக்கையை வைக்க முயற்சித்தபோது எசக்கிக்குக் குடிப்பது அறவே கூடாது என்பது தெளிவாகப்பட்டது.

செவுத்தி மகன் விஜிதவைக் காணவில்லை என்பது பாரதூரமான விஷயம், வழக்கமாக விஜிதவின் ஸ்தானப்புள்ளிகள் ரகசியமாய் இருந்தாலும் தெரிந்தே இருக்கும்; அல்லது தெரிவிக்கப்படும்.

இப்போது காணவில்லை என்கிறார்களே !

இது மிகவும் பாரதூரமான விஷயம்.

என்றால், கரீமையும் காணாததையும் எப்படிச் சொல்கிறது?

செவுத்தி அசையாமலிருப்பதைக்கண்டு எசக்கிக்குக் கோபம் வந்தது. எசக்கியினுள்ளே ஆழத்தில் அமிழ்ந்து போயிருந்த தேவதை வெளியே வந்து

"எப்போது பார்த்தாலும் அமுதத்தின் யோசனை தானா? கழுதையே! உன்மகனைக் காணவில்லை என்று கொஞ்சமாவது கவலைப்படுகிறாயா? அமுதம் பருகுவதே உன்னுடைய வேலையாகப் போய்விட்டது, என்னைப்பார்! உன்னை மாதிரி எப்போதாவது சாக்கடை ஓரத்தில் விழுந்துநாறியிருக்கிறேனா? இந்தக் குடிகார யோசனைகளை விட்டு விட்டு மகனைத் தேடு; தேடு!" என்று எசக்கியின் தொண்டை மூலமாகப் பெலத்தே பிரலாபித்தாலும் செவுத்தியோ தன் பாட்டில் நாடியைத் தடவி விட்டுக் கொண்டான்.

எசக்கிக்குத் திடீரென்று ஒரு மூளை அலை பாய்ந்தது. பாதரிடம் கூட்டிக் கொண்டு போவோம் இந்த மகனை. பாதருக்கு இப்படியான நிலையில் உள்ளவர்களைக் கண்டாலே சந்தோஷம். சுங்கானைப்பற்ற வைக்காமலே அறிவுரை சொல்லும் ஆர்வம் எழும். செவுத்தியான் ஒத்துக்கொண்டு எழுந்தான். பாதரிடம் பழைய புத்தகங்கள் ஏதாவது தட்டுப்படக்கூடும். அவரிடம் புத்தகம் கொள்முதல் செய்வதற்குக் கையில்காசு தேவையில்லை. கடன் சொல்லி வாங்கி, ஒரு கிழமைக்குப் பிறகு போனாலே அவர் மறந்து போவார். அவரிடம் உடன் வேலை ஏதாவது கிடைத்து இரண்டு ரூபாய் கைக்கு வந்தால் போதும்.

உபதேசங்களை எசக்கி கேட்டுக் கொள்ளலாம்.

செவுத்தியும், எசக்கியும் போன நேரத்தில் பாதர் பூசை முடிந்து தன் மக்களுள் பிரதானமானவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். தன் இருப்பிடத்தின் வரவேற்பறையில்.

எசக்கியும், செவுத்தியும் வெளியில் குந்தியிருந்தார்கள். எட்டு மணி அளவில் சொர்க்கம் பூட்டுப்பட்டுப் போகும் என்பதையும், நேரம் ஏழு மணியாயிற்று என்பதையும் செவுத்தி யோசித்துக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான்.

எசக்கி மிகப் புண்ணியமான காரியம் செய்து விட்டவன் போல் ஒரு விதமான சந்தோஷத்துடன் இருந்தான். நல்ல வேளையாக எல்லாரும் விரைவில் போய்விட பாதர் இவர்களைப் பார்த்தார். பாதருக்கு எசக்கியுடன், செவுத்தியானை அல்லது கரீமைக் கண்டால் பயம் வந்து விடும். அவரைப் பொறுத்த மட்டில் செவுத்தி திருத்தப்பட வேண்டியவன். கரீம் ஒரு சாத்தான். தன் பிரியத்துக்குகந்த எசக்கியை நாசமாக்குவது இவர்கள்தான்.

எசக்கிதன் பாணியில் செவுத்தியின் இக்கட்டை அவிழ்த்து பாதர் முன் போட்டான்.

செவுத்தி, (எசக்கி பாதரிடம் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தபோது) "ஆமாங்க, ஆமாங்க" என்று தலையாட்டுகிற போதுதான் தன் மகனைக் காணாதது எவ்வளவு பாரதூரமான விஷயம் என்பதை உணர்ந்து கொண்டான். அலிஸ் இருக்கிறாள், பார்த்துக் கொள்வாள். பாதரிடம் அதைச் சொல்ல முடியாது. கூடாது.

பாதர் சுங்கானைப் பற்ற வைத்துக் கொண்டார். அவருக்கு இப்போதுதான் செவுத்தி குடும்ப விவகாரம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. விஷயங்கள் மிகவும் முற்றிய பின் தன்னிடம் சொல்கிறார்கள். இந்த காணாமற் போயிருக்கிற விஜித சிறுவனாக இருக்கிற போதே இங்கு கொண்டுவந்து ஞானஸ்நானம் பண்ணுவித்திருந்தால் நெறிப்படுத்திப் பண்படுத்தியிருக்கலாம். 'கர்த்தரே' எனக்குப் பொறுமையைத் தந்தருளும் என்கிற ஜெபத்துடன் செவுத்தியின் விபரணைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். செவுத்தியான் விஜிதவின் தலைவன் கெம்பாவின் வீர திரங்கள் முதற் கொண்டு தனக்குத் தெரிந்தது சகலவற்றையும் சொன்னான்.



பாதருக்குத் தெட்டத் தெளிவாக இப்போது தெரிந்தது.

விஜித என்ன குற்றத்தையும் செய்திருக்கக் கூடும்.

'கடவுளே! ஏன் மனிதனுக்குச் சுயாதீனத்தையும் தநது வறுமை நெருக்கடியையும் தருகிறாய்? அவன் பலமற்ற இருதயத்துடன் சாத்தானை நோக்கி ஓடவா? நல்வழி நடக்க நிறைய மனோபலம் தேவைப்படுகிறது. இல்லை. இல்லை. சாத்தானை முழுக்க அரவணைத்துக் கொள்ளவுந்தான். இல்லாவிட்டால் எல்லாரும் கொலைகாரர்களாக இருக்க வேண்டுமே? கடவுளே! உம்முடைய சித்தம் இங்கேதான் தோன்றுகிறது, ஒற்றையடிப் பாதையில் மனிதனை ஓட விடுகிறீர். எதிரே வருவது பெரிதாய் இருந்தால் பாதை விலகியே போய் விடுகிறது. இந்த மாதிரியான நெருக்கடிகளில் நீர்தான் தடையை நீக்க வல்லமையுடையவர்'

செவுத்தியைப் பிரார்த்திக்கும்படி சொன்னார். தானும் பிரார்த்திப்பதாக உறுதி கூறினார். ஏதோ உந்தலால் இரண்டு ரூபாய் எடுத்து செவுத்தியிடம் கொடுத்தார் — தான் முன்னர் எடுத்திருந்த உறுதிகளை நினைவுக்குக் கொண்டுவராமல்.

எசக்கி செவுத்தியையும் இழுத்துக்கொண்டு தேவாலயத்துக்கு ஓடினான். செவுத்தி அகமகிழ்ந்திருந்தான். சொர்க்கம் அநேகமாக மூடப்பட்டிருக்கும். ஆனால் அவன் மாளிகைப் பக்கம் அதைவிடத் தரமானது கிடைக்கும். அங்கே எசக்கியும் பங்குக்கு வரமுடியாது. அந்தோனியாருக்கு முன்னால் முழந்தாளிட்டு எசக்கி உருக்கமாகப் பிரார்த்தித்தான். 'ஏசுவே! விஜிதாவுக்கு ஒன்றும் நேராமல் இருக்கவேண்டும்.'

எசக்கிக்குப் பிரார்த்திக்க நிறைய நேரமெடுத்தது. செவுத்தியானுக்கு, எசக்கி கல்லாகிப்போனான் என்கிற ஆத்திரம் வந்தது. எசக்கி செவுத்தியைக்குறியிட்டுக் கொள்ளச் சொன்னான். செவுத்திக்குவேறு வழியில்லை. பிரார்த்தனை முடிந்து இருவரும் எழுந்து போனபோது சொர்க்கம் திறந்தே கிடந்தது.

செவுத்தி, 'அண்ணே! மனசுக்கு ரொம்ப வருத்தமாக இருக்கு' என்றபடியே சொர்க்கத்தை நோக்கி எசக்கியையும் இழுத்தபோது எசக்கி ஒன்றும் சொல்லவில்லை.

'நீ என்னப்பா' என்று அலுத்துக்கொண்ட தோடுசரி. தான ஏல்லாதுபோனால் தனி

(11ஆம் பக்கம் பார்க்க)

# காட்டு மரங்களைக் கட்டி அணைப்போம்

நீர், நல்ல காற்று, வளம் நிறை நிலம் ஆகியவையே வாழ்வதற்கான அடிப்படை ஜீவாதாரம்; இவற்றின் ஆதார சுருதி சோலைவனங்களே யென்று அமைதிக்குப் பெயர் போன இமாலயப் பிரதேசத்துக் கிராமங்களில் குரல்கள் ஆர்ப்பரித்து ஒலிக்கின்றன. இந்த ஒலிகள் கேட்டதும் சக்லானி அவர்களின் இடுங்கிக் கோடுகள் விழுந்த முகம் உயிர் பெற்று கண்கள் உற்சாகமடைந்து ஒளிர்கின்றன. அவர் 25 வருடங்களாய்த் தனிமனிதனாகப் பாடுபட்டதற்கான பலாபலன் இன்று நாளாந்தம் ஊற்றெடுத்துப் பாய்கின்றது.

மலைச்சாரல்களில் அவர் விதைவிதைத்து, மரம் வளர்த்தபோது பலர் பரிகசித்துச் சிரித்தனர். அரச வனவளப் பகுதியினர் சட்டதிட்டம் காட்டி மிரட்டினர். களவாக காட்டு மரம் தறித்து வியாபாரம் செய்வோர் பலமுறை அடித்துதைத்தனர் — அவரது பொறுமையும், விடாமுயற்சியும் இன்று வீறுநடை போடுகின்றன.

அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட மரங்களே இன்று மலைச்சாரல் கிராமங்களுக்கு எல்லாம் பாதுகாப்பளிக்கின்றன. கிராமங்களின் மேற்பரப்பு மலைச்சரிவுகளை யெல்லாம் சூழ்ந்துள்ள 45,000 மரங்கள் நிலவளத்தை மேம்படுத்துவதுடன், நீர்நிலையில் ஜீவநாடியாகவும், கால்நடைகளுக்கான உணவாகவும், விறகாகவும், பச்சிலைப் பசளையாகவும் அப்பகுதி மக்களுக்கு உதவுவதைக் கண்டு அப்பகுதிக்கு வரும் பிற மாவட்டத்தவர் எல்லாம் மரம் வளர்க்க உற்சாகம் பெறுகின்றனர்.

இதன் காரணகர்த்தாவான சக்லானி அவர்கள் மரங்களை அணைத்துப் பேணுவோம் என்பதற்கமைய பணியாற்றும்

ஜி. வெங்கடரமணி

சிப்கோ இயக்கத்தின் விசுவாசமான உறுப்பினர். எழுபதுகளின் தொடக்கத்தில் இமாலயப் பிரதேசத்தில் காட்டுமரம் தறித்துவிற்கும் கொழுத்தமுதலாளிகளுக்கெதிராக தொடங்கியதே சிப்கோ இயக்கம். இன்றோ மக்கள் மனங்கவர்ந்த தனித்துவமான சூழற்பாதுகாப்பு இயக்கமாக ஒளிபரப்புகின்றது. இமாலயப் பிரதேசத்தில் ஆழ, அகலமான அத்திவாரத்தைக் கொண்ட இயக்கம் பரந்தளவில் பெண்கள் இயக்கமாகவே கருதப்படுகின்றது. பிரதேசத்துப் பெண்கள் காட்டு மரங்களிலிருந்து அதிக பிரயோசனத்தைப் பெறுவதால் சிப்கோ இயக்கத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றுகின்றனர். மர வியாபாரிகளின் கோடரிகளிலிருந்து மரங்களைப் பாதுகாப்பதற்காக பெண்களே மரங்களைக் கட்டிப்பிடித்த வண்ணம், 'மரங்களில் கை வையாதீர்கள்; எம்மைத் துண்டாடுங்கள்' என்று கூறியதுடன் — இன்றைய இமாலயம் விழிப்படைந்து விட்டது; கொடிய கோடரிகளை வீசியெறிவோம்' என்றும் கோஷமெழுப்பினர்.

சக்லானி அவர்கள் 63 வயதிலும் தனது நேரத்தின் அதிக பகுதியை சிப்கோ இயக்கத்து செய்திகளை இமாலயப் பகுதி மக்களுக்கு எடுத்துக் கூறுவதிலேயே செலவு செய்கின்றார். கால்நடையாகவே கிராமம் கிராமமாகச் சென்று, மரங்களின் முக்கியத்துவம் பற்றியும், மரங்கள் அழித்தொழிக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பது பற்றியும் மக்களுக்குப் புரியும் விதத்தில் எடுத்தியம்புவார். மாலை வேளைகளில் அவரால் ஒழுங்கு செய்யப்படும் கூட்டங்களுக்கு பெண்களும் பாடசாலைப் பிள்ளைகளும் அதிக எண்ணிக்கையில் வந்து கூடுவார்கள். கூட்டம் முடிய இவர்கள் எழுப்பும் கூட்டிசை ஓசைகள் கிராமங்களின் மூலைமுடக்கெல்லாம் அலை ஒடி ரீங்காரிக்கின்றது.

இவையெல்லாம் நடந்தும் கூட இமாலயத்துக் கீழப்பகுதிக் கிராமங்கள் பலவற்றில் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. பள்ளத்தாக்குப் பகுதிகள் எல்லாம் காய்ந்து, கட்டாந்தரையாய்க் காட்சி தருகின்றது. இந்தக் கிராமங்களின் மேற்பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக மலிந்து சொரிந்த மரங்களே நிற்கின்றன. காடுகள் அழிக்கப்பட்டு, இயற்கை நிலைச்சமன்பாடு நாசமாக்கப்பட்டுள்ளதனால் கிராம மக்களின் ஜீவனோபாயத்தின்

(11ஆம் பக்கம் பார்க்க)

---

சென்ற வாரத் தொடர்ச்சி

# பெண்களுக்கெதிரான வன்முறை — பலாத்காரம்

"ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு சமரசமாக ஒரு தாரமணமுறை (ஒருபுருஷமணமுறை) வரலாற்றில் தோற்றம் பெறவில்லை. மண முறையின் உச்சவடிவம் அது என்பது போகட்டும். அதற்கு மாறாக ஒருபால் மற்றொரு பாலை அடிமைப்படுத்தியதாக அது தோற்றமளிக்கிறது. ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய காலங்களில் அறவே அறிந்திராத இருபால் சச்சரவு குறித்து விடுத்த பிரகடனமாகவே அது தோற்றமளிக்கிறது ..... அடிமை முறையுடனும் தனிச் சொத்துடனும் சேர்ந்தாற் போலவே அது ஒரு சகாப்தத்தைத் துவக்கி வைக்கிறது.

பெண்களது பாலியலை ஆண்கள் கட்டுப் படுத்துவதற்கும் அதிகாரம் செய்வதற்கும் உதவும் ஒரு கருத்துப்படிவமாகவே 'கற்பு' தோற்றம் பெற்றது, செயற்படுகின்றது. கற்பு நிலையை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று மேடைகளிற் பாடினாலும்கூட மண வாழ்வில் விசுவாசமின்றி இருக்கும் உரிமை இப்போது கூட ஆணிடமே இருக்கிறது. ஆனால் பெண்ணோ சுயவிருப்பமின்றி ஆணினது பலாத்காரத்திற்கு ஆளானால் கூட மோசமாகத் தண்டனை பெறுகிறாள். இலக்கியங்களும் இந்த அநீதியான, ஒருதலைப் பட்சமான ஆதிக்கத்தை மேன்மைப் படுத்துவனவாகும். சீதையைத் தீக்குளிக்கும் படி இராமன் ஆணையிட்டதும் அகலிகையைக் கௌதமர் கல்லாக்கியதும் இந்த அடிப்படையிற்தான்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும்போது தமது வாரிசுகளின் தந்தைமையை உறுதி செய்ய ஆணாதிக்கச் சமூகம் வளர்த்த கோட்பாடே கற்பு என்பது தெளிவாகும். எனவே பலாத்காரம் செய்யப்பட்டால் கூட தாம் "கெட்டுப் போனவர்கள்" என நினைத்துக் குற்ற உணர்வுக்கும் அவமானத்திற்கும் உள்ளாவதைப் பெண்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

கற்பு பற்றிய இந்தக் கருத்துகளைப் படிப்போரிற் சிலர், இவை ஒழுக்கக் கேட்டுக்காகவே வாதிடுகின்றன என இவற்றைக் கொச்சைப்படுத்த முனையலாம். இவர்கள் ஆண்–பெண் உறவுகளின் சமூகவியலையும் குடும்பவடிவத்தின் மாறும், வளரும் தன்மையையும் இதற்கும் மேலாக பெண்ணொடுக்குமுறையின் மிக நுண்ணிதான செயற்பாடுகளையும் புரிந்து கொள்ள மறுப்பவர்களேயாவர்.

பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஒன்று எனப் பலாத்காரத்தைக் கருதுவோர் திறந்த மனதுடனும் பரந்த அடிப்படையிலும் இதனை அணுக வேண்டும். பலாத்காரம் என்றுகொள்ளப்படவேண்டியது எது என்பது இச்சமயத்தில் ஒரு முக்கிய வினாவாகும்.

பெண்ணினது சுயவிருப்பம் இன்றி எந்த ஆணாவது (அவன் கணவனாகவும் இருக்கலாம்) பெண்ணைத் தனது இச்சைக்குட்படுத்தல் பலாத்காரமாகும். ஏனெனில் பெண்ணை நிர்ப்பந்திப்பதும், அவளது மனித உரிமையை மீறுவதும் இம்சிப்பதும் உடற்துன்புறுத்தலும் தான் பலாத்காரத்தின் பிரதான அம்சங்கள். இவற்றின் அடிப்படையில்தான் எது பலாத்காரம் என்பதை நிர்ணயிக்க வேண்டும். இத்தகைய செயல் எத்தகைய சூழ்நிலையில், எத்தகைய உறவுமுறைக்குள் நிகழ்ந்தாலும் அது பெண்ணுக்கெதிரான வன்செயலாகவே கருதப்படவேண்டும். இத்துடன் இன்னோர் விடயமும் இங்கு முக்கியமானது. பெண்ணினது சம்மதம் அற்ற உடலுறவு மாத்திரமல்ல ஏனைய பாலுறவு நோக்கமுள்ள உடற்துன்புறுத்தல்களும் கூட பலாத்காரமே ஆகும். ஆனால் எமது சட்டங்கள் பெண்ணின் சுயவிருப்பமற்றதும், அந்நிய ஆண் ஒருவனால் பலத்தின் பேரில் மேற்கொள்ளப்படுவதுமான உடலுறவையே Rape எனக் குறிப்பிடுகின்றன. (மண உறவுள் நிகழும் இத்தகைய துன்புறுத்தலை எவரும் இவ்வாறு கருத்து நிலைப்படுத்துவதில்லை. சட்டமும் இதற்கு இடம் கொடுப்பதில்லை) ஒரு சமயம் யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிகழ்ந்த இராணுவத்தினரின் வன்செயல்களின் போது பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டது தொடர்பாக அப்பகுதியின் முக்கியஸ்தர் ஒருவருடன் கதைக்க வேண்டி ஏற்பட்டது. அப்போது அவர் "அங்கு கற்பழித்தல் அதிகம் நடைபெறவில்லை. பெண்கள் உடற்துன்புறுத்தல்களுக்கே ஆளானார்கள்" என்று கூறினார். பலாத்காரம் பற்றிய, சமூகத்தினதும் சட்டத்தினதும் கருத்தையே அவரது கூற்று குறிக்கிறது. ஆனால் பலாத்காரம் என்பது நிர்ப்பந்தமான உடலுறவு மாத்திரமல்ல, பாலுறவு நோக்கமுள்ள உடற் துன்புறுத்துகள் யாவுமே என எமது கருத்தைத் திருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

□□ சித்ரா □□

பலாத்காரம் தொடர்பாக இன்று எம்மிடையே வழங்கி வரும் சட்டம் மிகப் பழையதாகும்; சுமார் நூறு வருடங்களாக எந்தத் திருத்தத்திற்கும் உட்படாதது. அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் பலாத்காரம் தொடர்பாக ஏற்பட்ட சட்டத்திருத்தங்கள் எதுவும் இங்கு ஏற்படவில்லை. இச்சட்டத்தினை இங்கு இயற்றிய பிரிட்டிஷார் தமது நாட்டில் எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்திய பின்னருங்கூட நாம் அவற்றை அப்படியே கைக்கொள்கிறோம் என்பதும், இச் சட்டம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் போதுமானது என எமது வழக்கறிஞர்கள் வாதிடுவதும் நகைப்புக்கிடமானது.

இச்சட்டங்கள் குற்றம் புரிந்த ஆணைத் தண்டிக்கவும் பெண்ணுக்கு நீதிவழங்கவும் வல்லமை உடையனவா? இன்றைய எமது சட்டங்களில் உள்ள மூன்று முக்கிய அம்சங்கள்:

(1) பலாத்காரத்திற்கு சாட்சிகள் கேட்பது. இது பற்றிச் சட்டங்கள் தெளிவாகக் கூறாவிடினும் நீதிமன்ற வழக்குகளிற் சாட்சிகள் கேட்பது நடைமுறையாக உள்ளது. இது மிக அநீதியானதாகும். ஏனெனில் பலாத்காரம் பொது இடத்தில் நடப்பதில்லை. குற்றத்திற்கு இரையானவரை மேலும் பலமற்ற நிலைக்கு இது தள்ளுகிறது.

(2) பலாத்காரத்திற்குத் தான் உடந்தை இல்லை என்பதைப் பெண் நிரூபிக்கும் தேவை, பலாத்காரத்திற்கு இரையான பெண்ணை மேலும் இம்சிப்பதாகும். பலாத்கார முயற்சியின் போது அதனை வன்மையாக எதிர்க்க வேண்டாம் அதனால் உயிராபத்து ஏற்படலாம் என வைத்தியர்களும் பொலிஸாரும் பெண்களை எச்சரிக்கின்றனர். ஆனால் நீதிமன்றமோ பெண் உடந்தை இல்லை என்பதை நிரூபிக்கும்படி கேட்கிறது. தம்மைப் பலாத்காரம் புரிந்தவன் தண்டிக்கப்பட வேண்டும் எனப் பெண்கள் விரும்பினால், தமது உயிராபத்தைப் பொருட்படுத்தாது அதனை எதிர்க்க வேண்டும் என இது நிர்ப்பந்திக்கிறது.

(3) பெண்ணின் கடந்தகால பாலியல் வாழ்க்கை, அவள் திருமணமாகாத கன்னியா? பிறழ்ச்சியான பாலுறவுகளில் ஈடுபட்டவளா என்பன போன்ற கேள்விகளும் நீதிமன்றங்களில் எழுப்பப்படுவதற்கு இச்சட்டங்கள் இடமளிக்கின்றன. (ஒழுக்கமற்ற பெண் பலாத்காரம் செய்யப்படமுடியாது எனச் சமூகம் கருதுகிறது!)

இந்த அம்சங்களை நோக்கும்போது இவை, பலாத்காரம் புரிந்த ஆணைத் தண்டிக்க வலுவற்றனவாகவும் பலாத்காரத்தினால் பெண் அடைந்த உள, உடல் இம்சைகளுக்கு மேலாகப் பெண்ணைத் துன்புறுத்துவனவாகவும் அமைகின்றன.

எனவே பலாத்காரம் பற்றிப் பேசுபவர்களும் மனம் குமுறுபவர்களும் அவ்வன்செயல் பற்றிய விளக்கத்தைப் பின்வரும் முறைகளில் அமைத்துக் கொள்ளலாம்.

1. பெண்ணைப் பலாத்காரம் செய்தல் எவரால் மேற்கொள்ளப்பட்டாலும், அது கண்டிக்கப்படவேண்டியதும் தண்டனைக்குரியதுமாகும்.

2. பாலுறவு நோக்கமுள்ள சகல உடற்துன்புறுத்தல்களும் பலாத்காரமே.

3. பெண்ணுக்குச் சார்பான வகையிலும், குற்றம் புரிந்தவரை இலகுவில் தண்டிக்கும் வலுவுடையதாகவும் சட்டத்திருத்தங்களுக்காக கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.

4. பலாத்காரத்திற்குள்ளான பெண்கள் தாம் 'கற்பிழந்து' விட்டதாகக் குற்ற உணர்வுக்கும் அவமான உணர்வுக்கும் உள்ளாகாமல், இவ்வன்முறைக்கு எதிரான உணர்வை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். □

# சோவியத் – அமெரிக்க இராஜதந்திரப் போர்:

## — புஷ்ஷின் நாகாஸ்திரம்

கடந்த வாரம் இடம் பெற்ற நேட்டோ நாடுகளின் மகாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி புஷ், சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் கைக்கொண்டுவரும் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு எதிரான புதிய சில திட்டங்களை முன்வைத்தார். அதனை 16 நேட்டோ அங்கத்துவ நாடுகளும் ஏற்றுக் கொண்டன. கொர்பச்சேவின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதற்கு அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் செய்து வருவது தெரிந்ததே. கடந்த இதழில் கொர்பச்சேவின் இராஜதந்திர நடவடிக்கைகளும் அதற்கெதிராக தட்சர் மேற்கொண்ட நடவடிக்கை என்றும் விளக்கப்பட்டிருந்தது. இக்கட்டுரையில் புஷ் அறிவித்துள்ள சில திட்டங்களின் இராஜதந்திர இலக்குகளை நோக்குவோம். கடந்த இதழில் எழுதப்பட்ட சோவியத் யூனியனின் இராஜதந்திர நடவடிக்கைகளை மனதிற்கொண்டு புஷ் அறிவித்துள்ள எதிர்



கொர்பச்சேவ்

நடவடிக்கைகளின் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ளுமாறு வாசகர்களை வேண்டுகிறேன்.

புஷ் முன்வைத்த திட்டம் பின்வருமாறு உள்ளது. ''முழு ஐரோப்பிய நாடுகளும் ஒன்றுக்கொன்று ஒளிவு மறைவின்றி அனைத்தும் சுதந்திரமாகத் திறந்துவிடப்பட வேண்டும். இதன் மூலம் சுதந்திரமான ஒரு ஐரோப்பிய சமூகம் உருவாக வேண்டும். கிழக்கைரோப்பாவின் தடைகள் அனைத்தும் நீக்கப்பட்டு அது மேற்கைரோப்பாவிற்கு திறந்து விடப்படவேண்டும். இதன் மூலம் சுதந்திரமான ஒரு பொது ஐரோப்பிய சமூகத்தை தோற்றுவிக்கலாம், மேலும் கிழக்கைரோப்பிய நாடுகள் தமது பழைய தேசிய தனித்துவத்தை சுதந்திரமாகக் கைக்கொள்ள சோவியத் யூனியன் வகைசெய்ய வேண்டும்'' இவை போன்ற அறிவித்தல்களை புஷ் வெளியிட்டார்.

இங்கு இவ்விரு பெருவல்லரசுகளின் ஜனாதிபதிகளும் அறிவித்த சில சுவாரசியமான அம்சங்களை நோக்குவோம். கொர்பச்சேவ் ஐரோப்பிய பொதுக் குடும்பத்தை உருவாக்கும் திட்டங்களை அறிவித்துள்ளார். அதற்கெதிராக புஷ்சும் ஐரோப்பிய சுதந்திரப் பொதுச் சமூகத்தை உருவாக்கும் திட்டத்தை அறிவித்துள்ளார். இருவரினதும் அறிவிப்பில் ஓர் ஐரோப்பியப் பொதுத்தன்மை முன்வைக்கப்பட்டுள்ளது. இரும்பை இரும்பால் வெட்டுவது போல், வைரத்தை வைரத்தால் வெட்டுவது போல் கொர்பச்சேவின் ஐரோப்பிய பொதுக் குடும்பம் என்ற எண்ணத்தை புஷ் ஐரோப்பிய சுதந்திரப் பொதுச் சமூகம் என்ற ஆயுதத்தால் வெட்ட முனைகிறார். இந்த இராஜதந்திரப் போரின் தாற்பரியத்தை இனி சற்று விரிவாக நோக்குவோம்.

இருவரது திட்டங்களிலும் ஒரு பொது ஐரோப்பிய சமூகம் என்ற எண்ணம் வெளிப்படுகின்ற போதிலும் அவை இரண்டும் வேறுபட்ட இரு நோக்கங்களைக் கொண்டவை. கொர்பச்சேவின் திட்டமென்னவெனில் மேற்கைரோப்பிய நாடுகளை அமெரிக்காவிடமிருந்து பிரித்து விடுவதற்கான ஐரோப்பிய திட்டம் தான். ஆனல் கிழக்கைரோப்பிய நாடுகளைத் தொடர்ந்தும் தனது கொள்கைக்கும் செல்வாக்கு மண்டலத்துக்குள்ளும் வைத்திருப்பது தான். கொர்பச்சேவின் இத் திட்டங்களினல் நேட்டோ அணியைச் சேர்ந்த பல மேற்கைரோப்பிய நாடுகள் பெரிதும் குழம்பின. கொர்பச்சேவின் அறிவிப்புக்களில் நியாயமிருப்பதாக அவர்கள் உணர்ந்து அமெரிக்காவின் பிடியிலிருந்து விலகுவதற்கான தளம்பல் நிலையை அடையத் தொடங்கின. குறிப்பாக இந்த வரிசையில் மேற்கு ஜேர்மனி முதலிடம் வகித்தது. இந்தத் தளம்பல் நிலையைப் போக்குவதற்கு புஷ் நிர்வாகம் புதிய இராஜதந்திர மார்க்கத்தைக் கைக்கொள்ளத் தொடங்கியது.


இதில் புஷ்ஷின் நோக்கம் பின்வருமாறு அமைந்தது. அதாவது கிழக்கைரோப்பிய நாடுகள் அனைத்தையும் சோவியத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கான திட்டமே புஷ் அறிவித்த சுதந்திர ஐரோப்பிய பொதுச் சமூகம் என்பதன் அர்த்தமாகும். அதாவது மேற்கைரோப்பிய நாடுகளை அமெரிக்காவிடமிருந்து பிரிப்பதற்கான திட்டமாக கொர்பச்சேவின் திட்டம் அமைய, கிழக்கைரோப்பிய நாடுகளை சோவியத்திடமிருந்து பிரிக்கும் திட்டமாக புஷ்ஷின் திட்டம் அமைந்தது.

### உருளும் உலகில்

கிழக்கைரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனின் உபகோள் என்பது அனைவரும் அறிந்ததே. உண்மையில் இந்த கிழக்கைரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனுக்கு புவிசார் அரசியல் ரீதியாகவும் பெரும் பாதுகாப்பை வழங்குகின்றன. குறிப்பாக இந்நாடுகள் சோவியத் யூனியனுக்கு யுத்தத் தடுப்பு வலயங்களாக உள்ளன. எனவே இந்நாடுகளை சோவியத்தின் இத்தகைய வலைப்பின்னல் மூலோபாய நிலையிலிருந்து விலத்தி மேற்கைரோப்பிய நாடுகளுடன் சிறந்த உறவை உருவாக்கி, இவற்றை மேற்கைரோப்பியத் தன்மையுள்ளதாக மாற்றிவிடுவதன் மூலம் சோவியத் யூனியன் ஐரோப்பாவில் ஒரு ஸ்திரமின்மையை அடையும். அதாவது முதலாம் உலகமகா யுத்தத்திற்கு முன்பிருந்த ஐரோப்பிய வெளியுறவுச் சூழ்நிலையைத் தோற்றுவித்து விட்டால் அத்தகைய ஐரோப்பா சோவியத் யூனியனுக்குப் பாதகமான தன்மையைக் கொண்டிருக்கும் என்பதே அமெரிக்காவின் கணிப்பீடாக இருக்கலாம். இதில் இரண்டு நிலைகளும் அமெரிக்காவிற்குச் சாதகம்.

அதாவது புஷ்ஷின் அறிவித்தற்படி கிழக்கைரோப்பிய நாடுகளை கொர்பச்சேவ் திறந்துவிடத் தவறினல் கொர்பச்சேவ் ஒரு ''பொய்யன்'' என்று மேற்கைரோப்பிய நாடுகள் நினைக்கும். அல்லது கொர்பச்சேவ் அவ்வாறு திறந்து விட்டால் இன்னும் ஒரு தசாப்தத்தில் முதலாம் உலக யுத்தத்திற்கு முந்திய ஐரோப்பிய உறவு நிலையை முழு ஐரோப்பாவும் அடையும். அப்போது சோவியத்திற்குப் பாதகமான சூழல் ஐரோப்பாவிலேயே இருக்கும். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஐரோப்பிய நாடாகிய ஜேர்மன் சோவியத் யூனியனைப் பெரிதும் பாதித்ததை அனைவரும் அறிவோம். இவ்வாறு முதலாம் உலக யுத்தத்திலும் ஜேர்மன் சோவியத்திடமிருந்து ஏறக்குறைய அதன் 3/1 பங். நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டதை மனம் கொள்க. இது சோவியத்திற்குப் பாதகமானது.

புஷ்ஷின் அறிவிப்பின்படி ஒவ்வொரு கிழக்கு ஐரோப்பிய நாடும் சுதந்திரமாக தமது தேசிய தனித்துவத்தை வளர்க்க அனுமதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வாறு இந்நாடுகளின் தேசிய தனித்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் சோவியத்துடனன பொதுமைகளை



ஜோர்ஜ் புஷ்

அறுத்து ஒவ்வொரு கிழக்கைரோப்பிய நாட்டினையும் உதிரி நாடாக்க முனைகிறார் புஷ். இத்தகைய தேசிய முரண்பாடுகளின் பெயரால் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பெரிதும் அமைதியற்று முன்பு காணப்பட்டன என்பதை விளங்கிக் கொண்டால் புஷ்சின் வேண்டுகோளின் தாற்பரியம் இலகுவாகப் புரியும்.

தனது இவ்வறிவிப்பானது கொர்பச்சேவின் கபடநாடகத்தை உலகிற்கு அப்பட்டமாக வெளிப்படுத்தி விடும் என்று புஷ் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

கபடநாடகம் பற்றி புஷ் கூறும் இவ்வர்ணனையானது ஒரு தமிழ்ப் பழமொழியை ஞாபகப்படுத்துகின்றது.

''அவன் கிடக்கிறன் குடிகாறன்

நீ என்ர பிளாவுக்க கள்ளை ஊத்து',

இவற்றினை எதிர்கொள்ள கொர்பச்சேவும் பல புதிய உத்திகளை கையாளக்கூடும் என்று எதிர்பார்க்கலாம். □

**சி. சண்முகவடிவேல்**

---

# சீனாவின் கருவறை எரிந்தது

1917ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சி வெற்றி அளித்ததைத் தொடர்ந்து மாக்ஸிய சிந்தனை ஆசியாவிற்கு விரைவாகப் பரவத்தொடங்கியது. இந்தவகையில் 1919ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ற் கட்சியே ஆசியாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கம்யூனிஸ்ற் கட்சியாகும். இதன்பின்பு 1921 ஆம் ஆண்டு சீனவில் கம்யூனிஸ்ற் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இச்சீனக் கம்யூனிஸ்ற் கட்சியின் ஊற்றுக்கண் பீக்கிங் பல்கலைக்கழகமாகும்.

1919 ஆம் ஆண்டு மேமாதம் 4ஆம் திகதி பீக்கிங் பல்கலைக் கழக மாணவர்கள் யுத்த பிரபுத்துவத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தைத் தொடக்கினர், இதனுல் மாணவர்களும், மக்களும் அதிகம் விழிப்படைந்தனர். ருஷ்யப் புரட்சியினுல் இந்த மாணவர்கள் உந்தப்பட்டனர், கவரப்பட்டனர். இதனுல் சோவியத் ருஷ்யாவிலிருந்து ருஷ்ய மொழியில் மாக்ஸிய நூல்களை பல்கலைக்கழகத்துக்கு தருவித்தனர். பல்கலைக்கழகத்தில் இந்நூல்களை சீன மொழிகளில் மொழிபெயர்ப்பதில் அக்கறை காட்டப்பட்டது. சில பேராசிரியர்களும், பல்கலைக்கழகத்திற்கு வெளியிலிருந்த ஒரு பௌத்த பிக்குவும் இணைந்து மொழி பெயர்ப்பில் ஈடுபட்டனர். இவ்வாறு சில பிரதான நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகத்துக்குள் கல்வி வட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இக்கல்வி வட்டம் பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் விஸ்தரிக்கப்பட்டது. இறுதியாக 19ɛ1ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழக பேராசிரியர் சிலரும், மாணவர்களும், வெளியில் உள்ளோரும் சேர்ந்து கம்யூனிஸ்ற்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்துக்கு வெளியில் இலக்கிய கல்வி வட்டங்கள் கட்சிக் கிளைகளாக மாற்றப்பட்டன. அவ்வாறன கல்வி வட்டங்களுள் ஒன்றாக இருந்து பின்பு கம்யூனிஸ்ற் கட்சியில்க ஓர் அங்கமாக மாறியதுதான் மாஓ அங்கம் வகுத்த கல்வி வட்டமும்.

இந்த வரலாற்றுப் பின்னணி எமக்கு என்னத்தை உணர்த்துகின்றதென்றால் சீன கம்யூனிஸ்ற் கட்சியின் கரு அறையாக பீக்கிங் பல்கலைக் கழகம் இருந்துள்ளது என்பது தான். ஆனல் இன்று சீன ஆட்சியாளர் பீக்கிங் பல்கலைக் கழக மாணவர்களையும், அவர்களுக்கு ஆதரவாக கூடி நின்ற மக்களையும் ஆயிரக்கணக்கில் கொனறு குவிப்பதைப் பார்க்கும்போது தனது கரு அறையைத் தானே அழிப்பதுபோல் சீன கம்யூனிஸ்ற் கட்சியினரின் நடவடிக்கை அமைந்துள்ளது.

தனது இராணுவ நடவடிக்கையின் மூலம் 300 பேர் இறந்துள்ளதாகவும், அவர்களுள் 23 பேர் மட்டுமே மாணவர்கள் என்றும் ஏனையோர் இராணுவத்தினர் என்றும் சீன அரசு தனது உத்தியோக பூர்வ செய்தியிற் தெரிவித்துள்ளது. ஆட்சியாளர் விடுக்கும் அறிக்கைகளுக்கும், புள்ளி விபரங்களுக்கும் எத்தகைய அர்த்தமுண்டு என்பதை இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு யாரும் சொல்லிக் கொடுத்துத் தெரிய வேண்டியதில்லை. இந்த விடத்தில் சீன அரசே நீயும் விதிவிலக்கில்லை என்று எமது மக்கள் ஏளனமாய்ச் சிரிப்பர்.

மக்களைக் கொல்வதிலும், கொன்று விட்டுச்செய்தி சொல்வதிலும் சீன அரசுக்கும் ஒரு தங்கப் பதக்கம் வழங்கலாம். எப்படித்தான் சீனப்பட்டாடையால் போர்த்து மூடினுலும் கசாப்புக்கடை கற்பூரக் கடையாக மூடியாது. □

# சைவம் எங்கே செல்கிறது?

யாழ். இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகத்தின் ஆதரவில் மூன்று நாள் (மே. 23,24,25,) தொடர்ந்து நடைபெற்ற திருமுறை மாநாட்டில் பல சைவப் பெரியார்கள் பங்குபற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தினர். அவற்றில் சில இங்கே தொகுக்கப்பட்டுத் தரப்படுகிறது.

"சைவமக்களின்அரிய பொக்கிஷமாக விளங்கும் திருமுறைகளுக்கு மதிப்புக் கொடுக்காதவர்கள் சைவமக்களாக இருக்க முடியாது.

திருநாவுக்கரசர் சமயத்துடன் இணைந்து தமிழ்த்தொண்டாற்றினார். பெண் அடக்குமுறைகளுக்கெதிராகவும் சாதிமுறைக்கெதிராகவும் பேராடினார்."

— செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

இன்று உலக அரங்கில் இளைஞர் சக்திதான் ஆட்சிகளைக் கவிழ்ப்பதிலும் ஆதிக்கம் செலுத்துவதிலும் முன்நிற்கின்றது. அதேபோல் சைவம் வளர உதவுவதும் இளைஞர் கையில்தான் உள்ளது; மாற்றுச் சமயங்களை வளர்க்கப் பல ஆக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்கள். அதே போல் நாமும் இயக்கமாக இணைந்து செயற்படவேண்டும்.

— எஸ். சிவவிநாயக மூர்த்தி
கோட்டக்கல்வி அதிகாரி.

ஞானசம்பந்தர் இறைவனிடம் கேட்கின்ற தூய்மையானவராக இருந்தார். அதனால் அவர் கேட்டவைகளை இறைவன் வழங்கினார். அவர் கேட்டது தனது குடும்பசுகம் அல்ல. மதமும் தமிழும் உயிர்பெற்று வாழவேண்டும் என்பதே.

— புலவர்
ஈழத்துச் சிவானந்தன்

பாடசாலைகளில் சமயச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள் சமய முறைப்படி ஆசார சீலர்களாக நடக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் வெறுப்புக்காட்டாமல் சமயக்கல்வியைக் கற்பார்கள்.

—சி. சரவணபவன்
வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்.

சைவமதத்துக்கும் தமிழுக்கும் நெருக்கடி காலத்துக்குக் காலம் இருந்து வந்தது. சமணத்துக் கெதிராக சம்பந்தரும் திருநாவுக்கரசரும் போராடினார்கள். பின்னர் மாணிக்கவாசகரும் சுந்தரரும் போராட்டம் நடத்தி வெற்றிகண்டார்கள்.

—ஆ. மாதவன்.

திருமுறைப் பாடல்கள் யாவும் தரமான சிறந்த இலக்கியங்களாகும்.

— சோ. பத்மநாதன்
விரிவுரையாளர்.

இந்துக்களின் வாழ்வு தர்மத்துக்குட்பட்டது. மாணவர்களுக்கு தர்மத்தைப்பற்றி போதிக்க வேண்டும்.

— இ. சச்சிதானந்தன்

சிவபெருமான் வைரவப் பெருமானின் செருக்கை அடக்கினார். இன்று எம்மவரின் செருக்கை அடக்கும் கடவுள் வைரவர்.

— சபாரத்தினம்.

## சொர்க்கம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

யே பருகி நாசமாகிப் போவான் என்கிற சமாதானத்துடன் எசக்கி தன் ஒரு ரூபாயுடன் செவுத்தியைச் சேர்ந்து கொண்டான்.

அவன் மகிழ்ச்சியெல்லாம் கரைந்துபோய், மெள்ள மெள்ள சோகம் மனதில் ஆழ்ந்தது.

கனத்த மனத்துடன் அமைந்த நிலையும் சோகம். பாதரின் எதிர்பார்ப்புகளுக்கு எதிராக சொர்க்கத்துக்கு வந்ததின் குறுகுறுப்பும் சோகம். சுரம் இல்லாத வெறுமையும் சோகம்...

செவுத்தி இதற்கிடையில் ஏனோ பெரிதாகப் புலம்பத் தொடங்கினான். எசக்கி மனத்திலிருந்த கொதி எண்ணெயில் இந்த நெருப்புப் பொறிபட்டது.

செவுத்தியின் புலம்பலைத் தொடர்ந்து, எசக்கி கற்பிழந்துபோன ஒரு பத்தினி போல அதை விடப் பெரிதாகப் புலம்பத் தொடங்கினான். ஒரு நீள நேரப் புலம்பலுக்குத் தேவையான அமுதத்துக்குக் குறைவாகவே அமுதம் உள்ளே போயிருந்ததால் சீக்கிரமாக இன்னும் தேடிக் கொள்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டுபோக இருவரும் தொடங்கினார்கள்.

அதன் விபரங்கள் யாவும், பாதருக்கு ஒரு வாரம் கழித்து எசக்கியின் பாவமன்னிப்புப் புலம்பலூடாகத் தெரியவந்து, அவர் தன் அங்கியின் நூல் பட்டன்களைப் பிய்த்துக் கொண்டிருந்தார்.

எசக்கிமேல் கோபப்படுவது அர்த்தமில்லாதது. அவன் மனவிசைகளின் காரண காரியத் தொடர்புகளை அறிவதும் அவற்றின் மூலமாக அவனை நெறிப்படுத்த முயல்வதும் கடைசியாக ஒரு வீண் முயற்சிதானோ என்று கவலைப்பட்டார்.

'என்னைக் கண்ட அதே இரவுக்குள் குடித்து வெறித்துத் திருடித் திரும்பவும் குடித்து வெறித்துத் தங்களையே நாசமாக்கிக் கொண்டிருக்கிறார்களே!' கர்த்தரே! 'பன்றிக்கு முத்தைக் கொடாதே' என்று இவர்களை வைத்துத்தான் சொன்னீரா? ஏசுவே! இதோ ஒரு வாரத்துக்கு முன்புதான் ஒரு தேவனாக இருந்த எசக்கி, இன்று நெறியிழந்து முன்னால் நிற்கிறான். திரும்பவும், இது போல் எத்தனை தடவை?

கடவுளே சபித்தே இவர்களை அனுப்புகிறீராயின் நான் ஏன்? இந்தத் திருச்சபையேன்? 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள்' என்ற அழைப்பை விடுத்ததேன்? சிலுவைக்குறி ஒன்றைத் தன் தெய்வ நிந்தனையை ஒட்டி இட்டுக் கொண்டார்.

'யேசுவிடம் உண்மையாகவே அடைக்கலம் புகுந்திருப்பவர்களாயின் இவர்களுக்கு இந்த இக்கட்டுவந்திருக்காதே! அப்படியா? தேவனே! சாத்தானை வெல்ல உம்பலம் வேண்டும். உம்மிடம் வருவதற்கு சாத்தானை வெல்ல வேண்டும். கர்த்தரே! வழிகாட்டும்.'

(தொடரும்) □

## காட்டு மரங்களை...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்நாடி ஊசலாட விடப்பட்டுள்ளது.

தமது அவலங்களையெண்ணிக் கவலைகொள்ளும்போதெல்லாம், ஊற்றெல்லாம் எங்கே போய்விட்டன; அடிக்கடி ஏன் வெள்ளம் வரவேண்டும்; ஏன் விளைநிலங்கள் பாழடைந்தன; ஏன் ஆறுகள் சரியடைகின்றன; அதிகளவு ஏன் மண்சரிவுகள் நிகழ்கின்றன என்ற கேள்விகளே விஸ்வரூபமெடுக்கின்றன. சோலைவனத்து மரங்களை அழித்தொழித்ததாலேயே இந்தநிலைமையென்பதை அவர்கள் நன்குணர்ந்துள்ளனர். இப்பிரச்சினைக்கு ஒரளவு தீர்வை சிப்கோ இயக்கம் கோடிட்டுக் காட்டியுள்ளது. 1978இல் உத்திரகாசி மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான விளைநிலங்களும், காடுகளும் பாரிய மண்சரிவுகளாலும், நிலப்பெயர்வுகளாலும் இல்லாதொழிக்கப்பட்டன. அந்நாட்களில், காந்திய அடிப்படையில் நடவடிக்கையெடுத்து சிப்கோ இயக்கம் இமாலயப் பிரதேசத்து மரங்களை வெட்டியழிப்பதைத் தடை செய்ய அரசை நிர்ப்பந்தித்தது.

வாயே தொடர்பு சாதனமாகவும், கரடுமுரடான மலைப் பாதைகளில் பயணம் கால்நடையாகவும் இருக்கும்போது இந்தச் செய்திகளையெல்லாம் பரப்புவது மிக ஆறுதலாகவே நடைபெறுகிறது. இருந்தாலும், சிப்கோ இயக்கத்தினர் ஒரு வருடத்தில் மட்டும் இமசல் பிரதேசம், உத்திரப் பிரதேசம், அஸாம் ஆகிய இந்தியப் பிரதேசத்தினதும், நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளினதும், இமாலயப் பிரதேச சோலைவனப் பாதைகளில் 5,000 மீற்றர் வரை பாதயாத்திரை செய்துள்ளனர். கண்டபடி மலைப்பிரதேசங்களை அழித்தொழிப்பதால் ஏற்படும் அனர்த்தங்களை எடுத்துக் காட்டியதுடன், காட்டுவளச் சுற்றுப்புறச் சூழலுக்கேற்பட்ட அட்டூழியங்களுக்கான கண்கண்ட காட்சிகளாகவும் விளங்குகின்றன.

மனிதனின் இந்தச் செயல்கள் மிக விரைவாக மாற்றியே அமைக்க முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும். இந்த நிகழ்வு உள்ளூர் மக்களை மட்டுமல்ல, குறிப்பிட்ட சூழலின் கண்ணுக்கெட்டாத தூரத்தே வசிக்கும் ஏனையோரையுமே நேரடியாகத் தாக்கும். எனவே இயற்கையோடு ஒன்றி வாழ்வோம் என்றார் சிப்கோ இயக்கத் தலைவர்களில் ஒருவரான சுந்தலால்.

— ஏத்ஸ்கான் □

## சிந்திக்க வைத்த...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகத்தின் விமர்சனப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் பின் வரும் கருத்துப்பட ஒரு வசனம் '..............' என்று தொடர்கிறது. அந்த வசனக் கருத்துக்கள் ஆணாதிக்கத்தின் குறியீடுகளாக அவர்கள் பயன்படுத்தியவை: கேவலமான, அவமானப்படவேண்டியவை. அந்தப் புத்திஜீவிகளின் புரிந்துணர்வை உண்மைப்பட உரைத்து, இப்படியான நிகழ்ச்சிகளும் எமது பிரதேசத்தில் நடைபெறுகின்றன 'என்று பத்திரிகைமூலம் அறியும்போது மிக வேதனையடைய வேண்டியுள்ளது.

இன்னும், இப்படியான அர்த்தமற்ற கலை நிகழ்ச்சிகளை விமர்சித்து தவறுகளைச் சுட்டிக் காட்டுபவர்களுக்கு 'திசை' களம் அமைத்துக் கொடுக்கும் என எதிர்பார்க்கிறேன்.

— பா. தனபாலன்
சுழிபுரம்.

### 30-5-89 செவ்வாய்

ஈ.என்.டி.எல்.எவ். அழைப்பையடுத்து யாழ். குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ திருநெல்வேலிப் பகுதியில் அமைதிப்படையினருக்கும், புலிகளுக்குமிடையில் மோதல் நிகழ்ந்தது □ தேடுதலின்போது கைது செய்யப்பட்ட சோமாஸ்கந்தா கல்லூரி மாணவன் க. உதயநாதசிவம் பற்றிய விபரங்களை அறிவிக்குமாறு கோரி, வலிகாமம் கிழக்குப் பிரதேச மாணவர்கள், பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர் □ பாணந்துறை நகரசபைத் தலைவி இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் □ பம்பாய் வெங்காயத்தின் பெயர் ஸ்ரீ லங்கா பெரிய வெங்காயம் எனவும், மைசூர் பருப்பு செம்பருப்பு எனவும் இனி அழைக்கப்படுமென உணவு, விவசாய அமைச்சர் லலித் தெரிவித்தார் □

### 31-5-89 புதன்

இரத்தினபுரிப் பகுதியில் வெள்ளமேற்பட்டதில் மூவர் பலியானார்கள்; 25,000 பேர் பாதிப்புக்குள்ளானார்கள் □ காலைமுதல் இரணைமடுக் காட்டை நோக்கி ஷெல்வீச்சு நடைபெற்றது □ தென்பகுதியிலுள்ள இந்தியர்களுக்கு, சிங்களத் தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாப்பளிக்கும்படி, இந்தியத்தூதரக அதிகாரி இலங்கை அரசிடம் கோரியுள்ளார் □ வடமராட்சி கிழக்கில் மோதல்கள் இடம்பெற்றன □ ஆறுவருட உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக 30,000 தமிழ்ச் சிறுவர்கள் அநாதைகளானார்கள் என, மதிப்பீடு ஒன்று தெரிவித்தது □

### 1-6-89 வியாழன்

பொலிஸ் விசேட புலன் விசாரணைப் பிரிவின் தலைவர் பெனட் பெரேரோ காலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். காலிவீதியில் இரத்மலானைக்கும் தெஹிவளைக்குமிடையில் இச்சம்பவம் நடைபெற்றது □ பத்தரமுல்லையில் நடைபெற்ற சமயவைபவமொன்றில் ஜனாதிபதி பேசுகையில், அடுத்தமாத இறுதிக்குள் இந்திய அமைதிப் படையை வாபஸ் பெறவேண்டுமென்று, இந்தியாவிடம் கேட்டுக்கொள்ளப் போவதாகத் தெரிவித்தார் □ பருத்தித்துறையில் இரண்டு புதிய பஸ்கள் கொளுத்தப்பட்டன □ ஷெல்தாக்குதலினால் வீடுகள் சில சேதமடைந்தன □ சம்மாந்துறையில் தமிழ் — முஸ்லிம் சமூகங்களிடை ஏற்பட்ட மோதல்களைக் கண்டித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டது □

### 2-6-89 வெள்ளி

சம்மாந்துறைச் சம்பவங்களைக் கண்டித்து மருதானையில் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற முஸ்லிம்கள்மீது, பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் □ அமைதிப்படைத் தளபதி ஏ.எஸ்.கல்கட் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேசினார் □ காரைநகரில் மோதல் சம்பவமொன்று நடந்தது □ வவுனியா திலீபனின் 'எனது இராகங்கள்' கவிதைத்தொகுதி வெளியீட்டு விழா, வவுனியாவில் நடைபெற்றது □ அமைதிப்படை விலகலுக்கு காலக்கெடு விதிக்க முடியாதென இந்தியத் தூதர் ஜனாதிபதியிடம் கூறினார் □

### 3-6-89 சனி

இந்திய அமைதிப்படையினர் வெளியேறுவதை அனுமதிக்க முடியாதென, வட-கிழக்கு முதல்வர் தெரிவித்தார் □ பருத்தித்துறையில் முன்னாள் உதவிப் பொலிஸ் அதிபர் எஸ்.சண்முகநாதன் சுட்டுக் கொல்லப்பட்டார் □ திருமலையிலிருந்து யாழ். வந்து கொண்டிருந்த மினி பஸ் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் பலியானார்; 15க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் □ ஜனாதிபதியின் விசேட செய்தியை எடுத்துக்கொண்டு, வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பி. திலகரட்ண புதுடெல்லி சென்றார் □

### 4-6-89 ஞாயிறு

கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவுகளினால் 272 பேர் மரணமானார்கள்; 500 பேர் வரை காயமடைந்தனர் □ அக்கரைப்பற்றில், இந்திய அரசினால் வழங்கப்பட்ட பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது □ அரியாலையிலும், கட்டுடையிலும் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் □ அமைதிப்படை வாபஸாக வேண்டுமென்ற ஜனாதிபதியின் கோரிக்கையை சிறிமா வரவேற்றார் □

### 5-6-89 திங்கள்

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு நினைவு முத்திரை இன்று வெளியிடப்பட்டது □ ஜனாதிபதியின் தூதர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார் □ கட்டுடைப் பகுதியில் ரியூட்டறிக்குச் சென்று கொண்டிருக்கையில், கல்லூரி மாணவரொருவர் சுடப்பட்டு இறந்தார் □ புத்தூரில் தீவைப்புச் சம்பவத்தில் 10 வீடுகள் எரிந்தன; 8 பேர் மரணமானார்கள் □

## மறுப்பு

சென்றவார திசையில் 'நலன் விரும்பிகள் பிரசுரம்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், யாழ். இந்துக்கல்லூரியில் நிர்வாக ஊழல்கள் எதுவும் இடம்பெறவில்லையென, கல்லூரி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆ — ர்.

திசை
THISAI

## இசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

## இரும்புத் திரை தகர்ந்தது!

சோஷலிச புரட்சிமூலம் தொழிலாளர் சர்வாதிகாரத்தை நிறுவிய சீனவில் இன்று வெடித்துக் கிளம்பியுள்ள புரட்சி, சீன ஆட்சி யந்திரத்தையே ஆட்டங்காணச் செய்துள்ளது.

மக்களால், மக்கள் ராணுவத்தால் ஸ்தாபிக்கப்பட்டதாகப் பெருமையாக பேசப்பட்டுவந்த சோஷலிஸ அரசு, இன்று அதே, மக்களை அதே மக்கள் ராணுவத்தைக் கொண்டே அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டுளளது.

''எதிர்ப்புரட்சியாளர்களை அடக்குகிறோம்'' என்று அரச யந்திரம் கத்துகிறது.

''மிருகங்கள், பாஸிஸ்டை விடக் கேவலமான பாஸிஸ்ட்டுக்கள்'' என்று அங்கு போராடிக் கொண்டிருக்கும் மக்களும் மாணவரும் கோஷமெழுப்புகின்றனர்.

யார் எதிர்ப்புரட்சியாளர்கள்? மாணவரும் மக்களுமா? அல்லது மாணவரையும் மக்களையும் டாங்குகளாலும் ஆயுதங்களாலும் மிதித்துத்துவைத்து வேட்டையாடும் அரச யந்திர இயக்குநரா?

மாணவரும் மக்களுந்தான் எதிர்ப்புரட்சியாளர்கள் என்றால், கடந்த 40 வருடகால சோஷலிஸ ஆட்சியென்பதும் மக்கள் மனமாற்றம் என்பதும், மாவோவின் லட்சோப லட்ச மார்க்சிய மேற்கோள் அர்ச்சனை என்பதும் வெறும் கேலிக் கூத்தா?

அப்படியானால் இன்றைய உண்மையான எதிர்ப்புரட்சியாளர்கள் யார்?

உண்மையில், இன்று சீனவில் ஆட்சி யந்திர இயக்குநரே எதிர்ப்புரட்சியாளர்களாகவும், முதலாளித்துவ உள்வழியோடிகளாகவும் உள்ளனர் என்பதை அவர்கள் முன்வைத்த சுலோகங்களிலும், நடத்தைகளிலும் இருந்தே அறியலாம்.

''பூனை கறுப்பா வெள்ளையா என்பதல்ல முக்கியம். அது எலி பிடித்தால் சரி'' என்றார் டெங். அவரது பூனை எலி பிடித்ததோ என்னவோ, ஆனல் தனது மகனுக்கும் சொந்தக்காரருக்கும் பெரிய அரசு முதலீட்டு வியாபார நிறுவனங்களைப் பிடித்துக் கொடுத்துள்ளார் இவர். இவரைப்போலவே இவரது ஏனைய சகாக்களும் செய்துள்ளனர்!

இவற்றை அம்பலப்படுத்தவே, ஜனநாயகப்படுத்தல், பத்திரிகைச் சுதந்திரம் தேவையெனப் போராடுகின்றனர் மாணவரும் மக்களும்!

அப்படியானல் யார் எதிர்ப்புரட்சியாளர்கள்?

மக்கள் ராணுவம், தொழிலாளர் சர்வாதிகாரம் என்பவை இன்று ஆட்சியிலுள்ளவர்களின் சுயநல, முதலாளித்துவ அராஜகங்களை மறைக்கும் இரும்புத் திரையே. அன்று ரஷ்ஷியாவில் ஸ்ரலினல் விரிக்கப்பட்டு இரத்தவாடை வீசிய இத்திரை, சீனவில் மாவோவின் மேற்கோள் வாசனையால் மெருகிடப்பட்டு இறுக்கப்பட்டிருந்தாலும், இன்று தகர்ந்து விழ்ந்து விட்டது!

யார் மக்கள் பற்றி அதிகமாகப் பேசுகிறார்களோ, அவர்களே மக்களை அழிப்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதற்கு இன்றைய சீன நல்ல உதாரணம். ஆனல் மக்களை அழிக்க அழிக்க, அவர்களை அடக்க அடக்க மக்கள் புரட்சி வெடித்துக் கொண்டே இருக்கும்.

இது எதிர்ப்புரட்சியல்ல, புதுப்புரட்சி, புதுப்பாய்ச்சல்!

## முதல்வர் கூறுகிறார்

பூரணமான சிவில் நிர்வாகம் வட—கிழக்கில் ஏற்பட்ட பின்னரே 'இந்திய அமைதிப் படை வெளியேற வேண்டும்; அந்த நிலை உருவாகும் வரை அது வெளியேறக்கூடாது என, வட—கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார்.

இலங்கைப் படை இப்பகுதியில் இருக்கக்கூடாதென்றும், இப்படை எந்தவித நடவடிக்கைகளிலும் இறங்காமல் இருந்தால் மட்டுமே இந்தியப்படை வெளியேறவேண்டும் எனவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

### தெற்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப்படை வெளியேறுதென்றும், கூடிய விரைவில் அது வெளியேறுவதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

# பழையபடி வேதாளம்...

கடந்த ஏறக்குறைய பத்தாண்டுகளாக வட - கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் இலங்கை முப்படைகளின் பயங்கரத் தாக்குதல்களுக்கு இலக்காகித் துன்பப்பட்டதை எவரும் மறக்கமாட்டார்கள்.

இப்பொழுது அதனைவிடப் பயங்கரமான சூழ்நிலை உருவாகும் அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

பத்திரிகைச் செய்திகளின் படி, காரைநகர் கடற்படைத் தளப்பகுதி விஸ்தரிக்கப்பட்டு, விமானத்தளம் ஒன்றும் அங்கு அமைக்கப்படவிருக்கின்றது.

வேறு செய்திகளின்படி, வட-கிழக்கில் புதிய இலங்கை இராணுவப் பிரிவை நிறுவ 200 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதோடு, கிழக்கில் முன்பு அட்டகாசம் செய்து நாசம் விளைவித்த அதிரடிப்படையின் முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு வருவதோடு, புதிய முகாம்களும் நிறுவப்படவுள்ளன.

நாசகாலம் வருகுது, வருகுது என்ற குடுகுடுப்பைக்காரனின் பாணியில் இச்செய்திகள் அமைகின்றன.

இவர்களின் கொடூரங்களுக்கு நாம் மீண்டும் ஆளாகப் போகிறோமென்ற நியாயமான அச்சம் தமிழ்பேசும் மக்களின் மனதில் நிலவுகின்றது.

இந்தப் பயங்கர நிலையை எவ்வாறு முன்கூட்டியே தவிர்ப்பது.

இதுதான் தமிழ்பேசும் மக்கள் இப்பொழுது எதிர்கொள்ளவேண்டிய முக்கிய சவால்.

இதில் கோட்டை விட்டோமென்றால், பழைபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான்.

வரவிருக்கும் இந்த ஆபத்தைத் தவிர்க்க தமிழ்பேசும் மக்களைக் கொண்ட இராணுவமே வட-கிழக்கு மாகாணத்தில் நிலைகொள்ள வேண்டும் என்றும் இயக்கங்கள் ஐக்கியப்பட்டு ஆவன செய்ய வேண்டுமெனவும் மக்கள் விரும்புகின்றனர்.

## இலஞ்சம், ஊழல் மோசடிகள் களையப்பட வேண்டும்

உணவு முத்திரை வழங்கல், நிவாரண நிதி வழங்குதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்குதல், கட்டிட ஒப்பந்த வேலைகள் பெறல் போன்றவற்றிலும் இன்னும் ஏனைய பல அரசாங்கப் பணிகளிலும் இடம்பெற்று வரும் லஞ்சம் மோசடி போன்றவற்றை வன்மையாக ஒரு போராளி இயக்கம் பகிரங்கமாகக் கண்டித்துள்ளது. அது குறித்து சில அரசாங்க உத்தியோகத்தர்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர். சமூகத்தில் வேரோடிவிட்ட சமூக விரோத நடவடிக்கைகளை களைந்தெறிவதற்கு மக்களின் ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது.

### ஜே. வி. பியின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தானே வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ஒப்பந்தத்தில் இதற்கான ஏற்பாடு உண்டு.

இந்திய அரசாங்கம் இதற்குப் பதிலடியாக, ஒப்பந்தத்தின்படி தமக்குச் சில பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும், கால அட்டவணையின்படி அல்ல, இப் பணிகள் முடிந்தபின்பே தாம் செல்ல முடியுமென்றும் கூறியுள்ளது.

இந்தியப்படை இங்கு இருந்து விலக வேண்டுமென விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

இந்த இடியப்பச் சிக்கல்கள் சர்வதேச மட்டத்தில் என்ன எதிர் விளைவுகளை ஏற்படுத்துமென்ற கேள்விக்கு, எதிர்காலமே பதில் சொல்ல வேண்டும்.

ஆனல் ஒன்று, இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டுமென்பதில் எதிர்த்துருவங்களின் இணைவு கவனிப்பிற்குரியது.

அப்படி அது வெளியேறுமென்று சிறுபிள்ளையும் எதிர்பார்க்கவில்லை.

அவர்கள் வெளியேற வேண்டுமென்று ஜனதிபதி கேட்டதற்கு முக்கிய காரணம், தெற்கிலே ஜே. வி. பியின் பலத்தை இதன் மூலம் குன்றச் செய்யலாம் என்ற எண்ணமே - அரசியல் அவதானிகளின் கருத்துப்படி.

ஜே. வி. பியைப் பொறுத்த வரை, இந்திய அமைதிப்படை வெளியேறுதல் வேண்டும் என்ற கோரிக்கை வெறும் குறியீடே.

இந்திய அமைதிப்படை இங்கிருந்து வெளியேறினலும், அவர்களின் போராட்டம் தொடரும்.

ஏனென்றால், கிராமங்களில் வாழும் படித்த சிங்கள இளைஞர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வேலைவாய்ப்பு, அடிப்படை வாழ்க்கை வசதிகள், ரூபவாஹினியின் மேலைநாட்டு நுகர்வுக்கலாசாரத்திலிருந்து தமது பண்பாட்டினை (நவீனப் படுத்தப்பட்ட முறையில்) பாதுகாத்தல், போன்ற பிரச்சினைகள் சிங்கள ஆளும் வர்க்கத்தினல் தீர்க்கப்படமாட்டா என்பது அவர்களுக்குத் தெரியும். இந்நிலை இலங்கை சுதந்திரம் பெற்ற 1948 இல் இருந்தே தொடர்கின்றது. (தமிழ் மக்களைப் பொறுத்த வரை, இளைஞர்கள் இயக்கம் தோன்றும் காலகட்டத்தில் தான், தமிழ் ஆளும் வர்க்கத்தின் மேலாண்மை தூக்கியெறியப் பட்டது. இந்த ஒற்றுமைகள் கவனத்திற்குரியவை).

1971 இல் ஜே. வி பியின் கிளர்ச்சி வெடித்தெழுந்த போது, 'இந்திய விஸ்தரிப்பு வாத' எதிர்ப்பு அதன் முக்கிய அம்சமாக விளங்கியது.

இன்றும் அதே நிலைதான்.

இன்றும் அன்றும் சில மலையகத் தமிழர்கள் ஜே. வி. பியுடன் இணைந்தனர்.

ஆனல் இன்று ஒரு முக்கிய வேறுபாடு. 'இந்திய விஸ்தரிப்புவாத எதிர்ப்பு வேறு, இங்கு காலங்காலமாக வாழும் இந்திய வம்சாவழியினருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வேறு.

சாதாரண இந்தியரின் (கௌரவப் பெருச்சாளிப் பிரஜைகளின் சொத்துக்கள் அல்ல.) கடைகள், சொத்துக்கள் போன்றவை அழிக்கப்படுவதற்கு வழி கோலப்பட்டுள்ளது.

அண்மையில் ஜே. வி. பி. தலைவர் விஜயவீரவிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது: அப்பாவிச் சிங்களப் பொது மக்கள் தாக்கப்பட்டனர்; இவ்வாறு அவர்கள் தாக்கப்பட்ட போது நீங்கள் என்ன செய்தீர்கள்? என்ன செய்கிறீர்கள்? அவருடைய பதில்: இளகிய இரும்பை அடிக்க வேண்டிய நேரத்தில் அடிக்க எனக்குத் தெரியும்.

முன்பு இந்தியர்களையோ, தமிழர்களையோ, முஸ்லிம்களையோ இயக்கரீதியில் — தனிநபர்களின் மட்டத்தில் நடந்திருக்கலாம்—அவர்கள் தாக்கவில்லை.

எனினும் விஜயவீரவின் இப் பயங்கரப் பதிலில் தொக்கி நிற்கும் ஆபத்துக்களை நோக்கும்போது, இனிமேல் தெற்கிலுள்ள இந்தியர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் வேறுபாடின்றித் தாக்கப்படுவர் என்பதனை ஊகிக்கலாம். அந்தளவிற்கு சிங்களப் பேரினவாதம் இவ்வியக்கத்தில் வேரூன்றியுள்ளது.

1983 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தில் ஜே. வி. பி. ஓர் இயக்கமாக ஈடுபடாதபோதிலும்– தனிப்பட்டவர்களை நாம் குறிப்பிடவில்லை — அதற்குப் பொறுப்பு ஜே. வி. பியே எனக் கூறி, ஜே. ஆர். தனது கட்சியின் பங்கேற்பினைத் திசை திருப்பும் நோக்குடன் அதைத் தடை செய்தார்.

பிரதான அரசியல் போக்கில் ஈடுபட்ட இயக்கத்தினை அன்று ஒதுக்கியதன் வினையை இந்நாடு முழுவதுமே விரைவில் அனுபவிக்கப் போகிறது.

புதியவர் படும் பாடுகளைப் பார்த்து பழையவர், குள்ள நரி என அரசியல் விமர்சகர்களால் வர்ணிக்கப்பட்டவர், சிரித்துக் கொண்டேயிருக்கிறார்.

ஏனென்றால், வரப்போகும் இந்த அழிவுகளுக்கெல்லாம்—தர்மிஷ்டம், திறந்த பொருளாதாரம் என்ற பெயரில்—அவரே சூத்திரதாரி.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 9-6-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q.J. 78/89.